ISSN 1391-9504

# Vijey விஜய்

31.08.2016 - மலர் 13, இதழ் 27




# யாழ். கோட்டை

## சிறப்பம்சங்கள்

## இலங்கைக்கு ஆரியரின் வருகை

## உலகில் நிர்மாணிக்கப்படும் வீடுகள்

## நயகரா நீர்வீழ்ச்சி

விலை ரூபா 15/-

**மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குறிப்புகளுக்கமைய பெயர், வயது என்பனவற்றை உரிய கட்டங்களில் எழுதுக.

- நான் ரகு. எனது வயது 42. செய்திப்பத்திரிகை வாசிப்பது எனது பொழுதுபோக்கு ஆகும்.
- எனது பெயர் ஜூலியா. எனக்கு விருப்பமான நிறம் சிவப்பு. நான் இப்போதும் சிவப்பு நிற ஆடையே அணிந்துள்ளேன். எனது வயது 8.
- எனது பெயர் ஜெனீ. எனது வயது 6. எனக்கொரு அக்கா இருக்கிறார். அவரது பெயர் ஜூலியா.
- புத்தகங்கள் வாசிப்பது எனக்கு விருப்பமான விடயம். எனது பெயர் ராம். எனது வயது 12.


01. இங்குள்ள காட்சிகள் இடம்பெற வேண்டிய ஒழுங்குமுறையை 1,2,3,4 என முறையே இலக்கமிட்டுக் காட்டுக.



02. காட்சிகள் ஒழுங்குபடுத்தப்பட்ட பின்னர், அவற்றை வைத்து குட்டிக் கதையொன்றை எழுதுக.

........................................................................
........................................................................
........................................................................
........................................................................
........................................................................
........................................................................




03. தரைவழிப் போக்குவரத்து சாதனங்களில், ஒருவர் அல்லது இருவர் பயணிக்கக் கூடிய சாதனங்கள் எவை?

..........................

01. இங்கிருக்கும் போக்குவரத்து சாதனங்களில் வான்வழியாகப் பயணிக்க உதவுபவை எவை?

........................................................................

02. இங்கு அதிகமாக இருப்பவை;

1. வான்வழிப் போக்குவரத்து சாதனங்கள்
2. தரைவழிப் போக்குவரத்து சாதனங்கள்
3. கடல்வழிப் போக்குவரத்து சாதனங்கள்

01. இந்த தோட்டத்தின் பெயர் யாது?

..........................................

02. இங்கு தேன் பருக வந்திருக்கும் பூச்சியினம் எது?

..........................................

03. இந்த தோட்டத்தில் பூக்கள் பூத்துள்ள செடிகள் எத்தனை உள்ளன?

..........................................

04. செடிகளின் இலைகள் ............ நிறமானவை.
( நீல / பச்சை / மஞ்சள்)




- ஜீரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறரை மதித்து நடப்போம்



எமது வாழ்க்கையில் மற்றவர்களை மதித்து நடக்க வேண்டும் என பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கின்றோம். ஏன் நாம் மற்றவர்களை மதித்து நடக்க வேண்டும்? என்ற கேள்வி உங்களுக்கு பலமுறை ஏற்பட்டிருக் கலாம். உலகில் உள்ள அனைத்து சமூகங்களி லும் மற்றவர்களை மதித்து நடப்பதென்பது ஓர் உயர்வான பண்பா கவே கருதப்படுகின் றது. இவ்வாறான சமூகம் மனிதாபிமானம் மிக்கதாக இருக்கும்.



சகல மதங்களும் பிறரை மதித்து நடக்கும் பண்பினை ஓர் உயர்வான பண்பாகவே கருதுகின்றன. பிறரை மதித்து நடக்க வேண்டியது அனைவ ரினதும் கடமையாகும். இவற்றை பிள்ளைகளாகிய நீங்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த பழக்கத்தினை வாழ்வில் கடைப்பிடித்து நடப்பது அவசியமாகும்.

எனினும், யாருக்கு மதிப் பளிக்க வேண்டும்?, இதனை ஏன் நாம் செய்ய வேண்டும்? போன்ற தெளிவுகளை நாம் பெற்றிருப்பதும் சிறந்தது. அந்தவகையில், வயதில் மூத்தவர்களை நாம் எப்பொ ழுதும் மதித்து நடக்க வேண் டும். மதகுருமார், பெற்றோர் கள், ஆசிரியர்கள், சமூகத்தி லுள்ள பெரியவர்கள், குடும்ப அங்கத்தவர்கள் என அனைவரும் நாம் மதிப்ப ளித்து நடக்க வேண்டியவர் களே. வயதில் மூத்தவர்கள் மட்டுமன்றி; அனுபவத் தில், கல்வி யறிவில், நற்பண்பு களில் சிறந்து விளங்குபவர்களும் மதிப்ப ளிக்கப்பட வேண்டியவர் களாவர். அத்துடன், எம்மை விட வயதில் சிறியவர்களை



யும் நாம் மதித்து நடப்பது சிறந்தது. அவர்களின் தேவை களுக்கு செவிசாய்த்தல், அன்பு காட்டுதல், உதவி செய்தல் போன்ற பண்புகளின் மூலம் அவர்களுக்கு மதிப்ப ளிக்கலாம். நபர்களை தவிர; புனிதப்பொருட்கள், மத நம்பிக்கைகள் என்பனவற் றுக்கும் நாம் மதிப்பளித்து

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652



நடக்க வேண்டும். இந்த பண்பானது, ஏனைய மதத்தவர்களிடத்தில் நமக்கு நன்மதிப்பைப் பெற்றுத் தரும்.

மதிப்பளித்து நடக்க வேண்டும் எனும்போது, எவ்வாறு அதனை மேற்கொள்ளலாம் என்ற கேள்வி உங்களுக்குள் ஏற்படும். அதன்படி, எழுந்து நின்று மரியாதை செலுத்துதல், உதவிகள் செய்தல், வணங்கு தல், இன்சொற்கள் பேசுதல், மற்றவர்களின் பேச்சுக்கு செவிசாய்த்தல், பிறரை நிந்திக்காமல் நடத்தல் போன்ற செயற்பாடுகளின் மூலம் நாம் பிறருக்கு மதிப்பளித்து நடக்கலாம். பண்டைய காலம் தொட்டு நமது நாகரிகத்தில் நிலவிவரும் ஒரு நற்பழக்கமாகவே 'மதிப்பளித்தல்' எனும் பண்பு திகழ்கின்றது. எனவே, நாமும் வாழ்வில் பிறரை மதித்து நடக்கக் கற்றுக்கொள்வோம்.

மாணவ செல்வங்களே....

சைக்கிள் ஒன்றை வெல்லுங்கள்...!

அக்கரைப்பற்று மற்றும் திருக்கோவில் வலய மாணவர்களுக்கு மாத்திரம்

துர்க்கா பெலஸ் வர்த்தக நிலையம்

விஜய் பத்திரிகையின் ஊடக அனுசரணையில் வழங்கும் அரிய வாய்ப்பு...!

குலுக்கல் மூலம் தெரிவாகும் அதிர்ஷ்டசாலிக்கு சைக்கிள் பரிசாக வழங்கப்படும்





**நீங்கள் செய்ய வேண்டியது**

அக்கரைப்பற்று மற்றும் திருக்கோவில் வலயத்தைச் சேர்ந்த பிரதேசங்களுக்கு நேரடியாக வரும் நமது பிரதிநிதிகள் வழங்கும் சந்தா படிவத்தைப் பூர்த்திசெய்து அவர்களிடமோ அல்லது துர்க்கா பெலஸ் விற்பனை நிலையத்திலோ 03.09.2016 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைத்து உங்களுக்குரிய வெற்றி இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:
துர்க்கா பெலஸ்
சாகம வீதி,
கோளாவில்-02,
அக்கரைப்பற்று.
தொ.பே.இல: 0776771924

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறந்த மன்னன்

ஓர் ஊரில் பாண்டிய ராஜன் என்னும் மன்னன் வாழ்ந்து வந்தான். அவன் பக்க சார்பற்ற நடுநிலையில் நீதி வழங்கும் குணம் படைத்தவன். ஒரு சமயம், அவனுடைய ராணி அதிகாலையில் கங்கையில் நீராட விரும்பினாள். அதற்காக அவள் செல்ல இருந்த கங்கைக்கு அருகில் வாழ்ந்த குடிசைவாழ் மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டார்கள். ராணியார் கங்கையில் நீராடி முடிந்தபோது, அவளால் குளிரைத் தாங்க முடியவில்லை.

உடனே அவள் தன் பக்கத்தில் இருந்த ஒரு வேலைக்காரியை அழைத்து, "எதிரே உள்ள குடிசைக்கு தீ வை, நான் குளிர் காயவேண்டும்" என்று கட்டளையிட்டாள். ஆனால் அந்த வேலைக்காரியோ, "அந்த பாவத்தை செய்யமாட்டேன். குடிசை எரிந்துபோனால் அந்தக் குடிசையில் இருப்பவர்கள் என்ன செய்வார்கள்?" என்று கேட்டு பின்வாங்கினாள்.

உடனே ராணி, இன்னொரு வேலைக்காரியை அழைத்து "நீ போய் அந்தக் குடிசையை எரித்து விடு" என்றாள். அவளும் பற்ற வைத்தாள். அப்பொழுது காற்று அடிக்க, தீ ஏனைய குடிசைகளுக்கும் பரவி, அனைத்துக் குடிசைகளும் எரிந்தன. அதனைப் பொருட்படுத்தாமல் ராணி குளிர் காய்ந்துவிட்டு அரண்மனை திரும்பினாள்.

சிறிது நேரம் கழித்து அந்தக் குடிசைகளின் உரிமையாளர்கள் அனைவரும் அரசரிடம் நடந்த விபரங்களைக் கூறி ஆலோசனை கேட்டபோது, இதனைக் கேட்ட மன்னனோ கடுங்கோபத்துடன், அந்தப்புரத்திற்குள் நுழைந்தான். "நீ அந்த குடிசை வீடுகளை எரித்தது எவ்வளவு அநியாயம் தெரியுமா?" என்று கேட்டான். "அதைப் போய் வீடுகள் என்று சொல்லாதீர்கள். அவை கங்கையின் அழகையே பாழாக்கியது. அந்த ஓட்டைக் குடிசைகளை எரித்ததும் நன்மைக்கே" என பதிலளித்தாள்.

இதனைக் கேட்டதும் மன்னன் அருகில் இருந்த தாதிகளை அழைத்து "ராணி அணிந்திருக்கும் அனைத்து ஆடைகளையும், ஆபரணங்களையும் கிரீடத்தையும் கலைந்துவிட்டு, ஒரு காவி நிறத்திலான பழைய ஆடையொன்றை அணிவித்து அரச சபைக்கு அழைத்து வாருங்கள்" என்று பணித்தார். அரச சபையில் அரசன் சிம்மாசனத்தில் வீற்றிருக்க குடிசை உரிமையாளர்கள் ஒரு பக்கமும் ராணி ஒரு பக்கமும் நின்றார்கள். இரு பக்கங்களையும் விசாரித்த மன்னன், "நீதி பொதுவானது, அந்த குடிசைகளின்றி இந்த ஏழைகள் எப்படிக் கஷ்டப்படுவார்கள் என்பதை நீ உணரவில்லை. அதனால் நீ அரண்மனையை விட்டு வெளியேற வேண்டும். நீ பிச்சையெடுத்து, அவர்களுடைய குடிசைகளை மீண்டும் கட்டிக் கொடுத்த பிறகுதான் அரண்மனை திரும்பலாம்" என்று தீர்ப்பளித்து குடிசை மக்களிடம் மன்னிப்புக் கேட்டார் மன்னன்.

விரைவில்
சீக்ரட் சிக்ஸ் இரகசிய குழு
தொடர்கதை
மர்ம ஒளி பரப்பியது
செவ்வாய்க்கிரக மனிதர்களா....?
உண்மையை கண்டறிய
களம் இறங்கிய இரகசிய குழு
எதிர்பாருங்கள்...

# தூய அன்னம்

ஒரு நந்தவனத்தில் முனிவரொருவரின் மடமிருந்தது. ஒருநாள் அந்த முனிவருக்கு பகல் உணவினை கொடுப்பதற்காக, ஒரு ஏழை காய்ந்து வறண்ட ரொட்டிகளை கொண்டு வந்திருந்தார். அதேநேரம் அந்த ஊரின் பெரும் செல்வந்தர் ஒருவரும் பல வகை உணவுகளை அழகிய பாத்திரங்களில் கொண்டு வந்திருந்தார்.

ஆனால், முனிவரோ, செல்வந்தர் கொண்டு வந்த உணவை திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. ஏழை கொண்டுவந்த காய்ந்த ரொட்டிகளை மகிழ்வுடன் உண்டார். இதனைக் கண்ட செல்வந்தருக்கு கடும் கோபம் வந்தது. "நான் கொண்டு வந்த உணவை ஏன் தாங்கள் சாப்பிடவில்லை?" என்று கேட்டார். அதற்கு முனிவர் பதில் எதுவும் சொல்லாது மௌனமாக இருந்தார். பின்னர் செல்வந்தர் கொண்டுவந்த உணவிலிருந்து சிறு பகுதியையும் ஏழை கொடுத்த உணவில் சிறு பகுதியையும் இன்னொரு கையில் எடுத்து தன் தவ வலிமைக்கொண்டு பிசைந்தார். ஏழை கொடுத்த உணவிலிருந்து பால் சிறு துளிகளாக நிலத்தில் விழுந்த அதேவேளை, செல்வந்தர் கொண்டுவந்த உணவிலிருந்து குருதி சிறு துளிகளாக நிலத்தில் சிந்தியது.



இதனைக் கண்ட செல்வந்தர் ஆச்சரியத்துடன், "ஏன் இப்படி?" என்று கேட்டார். அதற்கு முனிவரோ "ஏழை கொண்டு வந்த உணவு அவனின் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்துச் சம்பாதித்த பணத்தைக் கொண்டு தயார்செய்யப்பட்டது. அதனால், அதிலிருந்து பால் சிந்தியது. ஆனால், உங்கள் உணவோ பிறரை வாட்டி வதைத்த பணத்தைக் கொண்டு தயார் செய்யப்பட்டது. அதனால், அதிலிருந்து ரத்தம் சிந்தியது. தங்கள் உணவைச் சாப்பிடுவது பாவம். அது சுத்தமான ஆகாரம் இல்லை. அது என் தவ வலிமையைக் கெடுக்கும் என்பதால்தான் உண்ணவில்லை" என விளக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சியும் விளம்பரமும்

ஊடக பாடநெறி பாகம்-II

பாடம்-119

ஒரு விடயத்தை மக்கள் மனங்களில் மிக இலகுவாக பதியச் செய்யக்கூடிய வல்லமையான ஓர் ஊடகம் தான் தொலைக்காட்சி ஆகும். ஏனென்றால் கூறப்படும் விடயமானது, எழுத்து வடிவம், ஒலி வடிவம் மற்றும் காட்சி வடிவம் என மூன்றும் இணைந்ததாக அது அமையும் போது மக்கள் அதனை மிக இலகுவாக கிரகிக்கவோ, உள் வாங்கவோ முடிகின்றது. தொலைக்காட்சியானது, அவ்வாறான வகையில்தான் மக்கள் மத்தியில் உன்னத சேவையை ஆற்றக்கூடிய ஒரு சாதனமாக திகழ்கின்றது.

குறித்த ஒரு செய்தியை பத்திரிகையில் வாசிக்கும் போது, அச் செய்தி தொடர்பான காட்சிகள் கண்களுக்கு புலப்படுவதில்லை. அவ்வாறே, வானொலியில் செய்தியொன்றை வாசிக்கும் போதும் அது தொடர்பான காட்சிகள் கண்ணில் புலப்படுவதில்லை. எனவே, அங்கு அந்த செய்தி முழுமை பெற்றுவிட்டதாக கருதிவிட முடியாது.




ஆனால் தொலைக்காட்சி எனும் போது அச்செய்தியுடன் தொடர்புபட்ட காட்சியும் காட்டப்படும்போது சம்பவம் நடைபெற்ற இடம் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள் என அனைத்தையும் காட்சி வடிவில் காணக்கிடைக்கின்றது. இது அந்த செய்திக்கு வலுசேர்ப்பதுடன், முழுமை பெற்றதாகவும் அமைகின்றது. தொலைக்காட்சியின் சிறப்புத் தன்மை இதில் தான் அடங்கியுள்ளது.

செய்திகள் மட்டுமன்றி நாடகங்கள், விளம்பரங்கள், அறிவித்தல்கள், பேட்டிகள் என அனைத்துமே காட்சியாக வருவதால் ரசிகர்கள் அதில் ஐக்கியமாகி விடுகின்றனர். குறிப்பாக, ஒரு விடயத்தை உணர்த்தும்போது அது தொடர்பான உதிரி வியாக்கியானங்களை, விபரிப்புக்களை கூறாமல் அவற்றை காட்சி யாகவே காட்ட முடிவதும் படைப்பாளிகளுக்கும் இலகுவாகி விடுகின்றது.ரசனையாளர்களுக்கும் அது புரியும் படியாக அமைந்தும் விடுகின்றது.

இதில் விளம்பரத்துறை அதிக நலனை அடைகின்றதெனலாம். உதாரணத்திற்கு விற்பனைப் பொருள் ஒன்றைப் பற்றிய விளம்பரத்தை எடுத்துக் கொண்டால் அந்த உற்பத்திப் பொருளின் வடிவம் அதனை பயன்படுத்துவதால் கிடைக்கின்ற பிரதிபலன்கள், அதன் விலை, கவர்ச்சி, தரம் ஆகியனவற்றை காட்சி வடிவில் கண்முன்னே காட்டக்கூடியதாக இருப்பதுடன், மக்களை கவரக் கூடிய வாய்ப்பும் இதில் அதிகம் கிட்டுகின்றது. எனவே, விளம்பரத்துறையானது, அதிகப்படியாக தொலைக் காட்சியின் ஊடாகவே கூடிய நலனை அடைகின்றதெனலாம்.

இவ்வாறான விளம்பரங்கள் தொலைக்காட்சி நிலையங்களால் மாத்திரமே தயாரிக்கப்படுவதில்லை. தனிப்பட்ட விளம்பர நிறுவனங்களும் இவ்வாறான விளம்பரங்களைத் தயாரித்து குறித்த தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு வழங்குவதுண்டு; இவை தனியார் விளம்பர நிறுவனங்களாக இருப்பவையாகும். விளம்பரங்களுக்கான பிரதிகளை தயாரித்தல், காட்சி ஒளிப்பதிவு முதல் கொண்டு விளம்பர நடிகர்களை நடிக்கச் செய்வது வரை அனைத்தையும் இந்த நிறுவனங்களே மேற்கொள்கின்றன. இது பற்றிய மேலதிக விபரங்களை அடுத்த இதழில் ஆராய்வோம்.

(தொடரும்)

**ரீஷபன்**

# சுப்பர் சூரிய சக்தி

இஸ்ரேல் நாட்டில் சூரிய சக்தியின் பயன்பாடு மிக அதிகம். இங்கு 5 வீடுகளுக்கு ஒரு வீடு என்ற விகிதத்தில் சூரிய ஒளிச் சக்தியைப் பயன்படுத்தி வருகின்றனர். ஜப்பான் நாட்டில் 20 லட்சத்திற்கு மேலான சூரிய ஒளி சக்திக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. அமெரிக்காவிலோ இல்லினோய்ஸ் மாகாணத்தில் அதிகளவு சூரிய ஒளிச் சக்தி அன்றாடம் பயன்படுத்தப்படுகிறது. தற்போது சூரிய ஒளியில் இயங்கும் கார்கள் பல நாடுகளில் தயாரிக்கப்படுகின்றன. இந்தக் கார்கள் சூரிய ஒளிச் சக்தியால் தொடர்ந்து ஒரு மணி நேரம் இயங்கக் கூடியவை. இந்தக் காரை நீண்ட நேரம் ஓட்டும் வகையில் அதன் தொழில்நுட்பத் திறனை அதிகரித்தால் எதிர்காலத்தில் பெற்றோல் போன்ற எரிசக்தியின் தேவை சிறிதும் தேவையற்றதாக மாறிவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.




(-அ)



# 60 ஆவது வயதில் ஊசல் கடிகாரம்

படத்தில் காட்டப்பட்டுள்ள ஊசல் கடிகாரமானது, 1956 ஆம் ஆண்டு கிறிஸ்டியான் ஹைகன்ஸ் எனும் நெதர்லாந்து விஞ்ஞானியால் கண்டுபிடிக்கப்






பட்டதாகும். இதிலுள்ள சிறப்பம்சம் என்னவென்றால் இதிலுள்ள சிறப்புப் பொறியானது, 1637 ஆம் ஆண்டு காலப்பருவத்தில் கலிலியோ கலிலியினால் கண்டுபிடிக்கப்பட்டதாகும். கண்பார்வை இழந்திருந்த சந்தர்ப்பத்திலேயே, இக்கண்டுபிடிப்பை கலிலி மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக



இற்றைக்கு பத்தாயிரம் வருடங்களுக்கு முன்னரே, இலங்கையில் முதல் குடியேற்றம் இடம்பெற்றுள்ளது. இதனைக் குறித்த தகவல்கள், எழுத்து மூலமான சான்றுகள் மிக அபூர்வமாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தகைய யுகத்தை வரலாற்று முற்பட்ட யுகம் என அழைப்பர். தொல்பொருள் அகழ்வின்போது, கண்டெடுக்கப்பட்ட எச்சங்கள், பழங்காலப் பொருட்கள் மூலம் அந்த யுகம் குறித்து தொடர்ந்து ஆய்வுகள் நடந்தவண்ணம் உள்ளன. அதன்படி, இளவரசன் விஜயனின் இலங்கை வருகை தொடக்கம் இலங்கையின் எழுத்து மூல வரலாறு ஆரம்பமாகின்றது. இது குறித்து வம்ச கதைகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. விஜயன் வருவதற்கு முன் இலங்கையில் மனிதனின் குடியேற்றங்கள் தோன்றி இருந்தபொழுதிலும் அது குறித்து எழுத்து மூல வரலாறு எதுவுமே இல்லை. அதனால், இளவரசன் விஜயன் உள்ளிட்ட குழுவினரின் இலங்கை வருகையே முதல் குடியேற்றம் ஆரம்பமாவதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.



## விஜயனின் வருகைக்கு முன் இலங்கையில் மனிதக் குடியிருப்புகள்

இலங்கையில் ஆரம்ப ஆதிக் குடியேற்றமானது, வரலாற்று முற்பட்ட யுகத்திலேயே ஆரம்பமானதாக கருதப்படுகின்றது. அது 3 யுகங்கள் வழியாக ஆய்வு செய்யப்பட்டன. அதாவது,

- ★ இரத்தினபுரி கலாசார காலம் (ஆரம்ப கற்காலம்
- ★ பலாங்கொடை கலாசார காலம் (மத்திய கற்காலம்)
- ★ நவீன கற்காலம்

ஆரம்ப கற்காலம் என்பது இற்றைக்கு 125,000 வருடங்களுக்கு முற்பட்ட காலமாகும். இரத்தினபுரியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது, இந்த யுகத்திற்குரிய மனித எச்சங்கள் கிடைத்துள்ளன. இற்றைக்கு 125,000 வருடங்களில் இருந்து கி.மு. 9000 ஆண்டு வரையிலான யுகம் பலாங்கொடை கலாசார காலம் ஆகும். இதனை மத்திய கற்காலம் என்று அழைப்பர். இக்காலத்தில் வாழ்ந்த மனிதன் 'பலாங்கொடை மனிதன்' என்றும் அழைக்கப்படுகின்றான்.

நவீன கற்காலம் கி.மு. 9000 ஆண்டுகளுக்கு பின்னர் ஆரம்பமாகியது. அக்காலத்தில் அதாவது, இற்றைக்கு 8000 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த இராவணன் என்ற அரசன் குறித்து தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இது குறித்து எழுத்து மூல தகவல்கள் இந்திய இராமாயணத்தில் உள்ளது. அத்தோடு, தேவர், அசுரர், நாகர் என மூன்று பிரிவினர் அப்போது வாழ்ந்து வந்தனர். கௌதம புத்தரின் இலங்கை வருகையும் இக்காலத்திலேயே நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

## குடியேற்ற பரவல் குறித்த இரு கருத்துக்கள்

இந்நாட்டில் ஆரிய குடியிருப்புகள், இளவரசன் விஜயன் உள்ளிட்ட குழுவினரின் வருகையுடன் ஆரம்பமானதாக கூறப்பட்டாலும், இது குறித்து வரலாற்றாசிரியர்கள் இன்னுமொரு கருத்தினையும் கொண்டுள்ளனர். அதாவது, இந்தியாவில் இருந்து வருகை தந்த வர்த்தகர்களும் குடியேற்றங்களை நிறுவியதாக அவர்கள் கருதுகின்றனர். இதன்படி, இலங்கையின் ஆரம்பக் குடியேற்றங்கள் குறித்து இரு வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.




## வியாபாரிகளால் குடியேற்றங்கள் உருவாகுதல்

புதிதாக குடியேற்றங்களை தோற்றுவிக்கும் நோக்கில் ஆரியர்கள் குடியேறியமை விஜயனின் வருகையுடன் ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு, வியாபாரிகளால் குடியேற்றங்கள் உருவாகின என்ற கருத்தினை பூஜாவலிய நூலிலும்,வலாஹச எனும் ஜாதக கதைகளிலும், பாகியன் எனும் மதகுருவின் அறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

பாகியனின் அறிக்கைகளில் இலங்கையில் மக்கள் வாழ்ந்ததாக குறிப்பிடப்படவில்லை. அசுர கோத்திரத்தார் தமது பொருட்களின் பெறுமதியை எழுதி வீதிகளுக்கருகில் வைத்ததாகவும் வெளிநாடுகளில் இருந்து வந்த வியாபாரிகள் அப்பொருட்களை விலை கொடுத்து வாங்கியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் பூஜாவலிய நூலில் இந்தியாவில் இருந்து வியாபாரத்திற்காக இங்கு வியாபாரிகள் வந்ததாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ங்கு ஆரியரின் வருகை



க.பொ.த (சா/த) பாடத்திட்டத்திற்கு உட்பட்டது

குறிப்பிட்டுள்ளது. இங்கு வருகை தந்த வர்த்தக குழுக்களால் குடியேற்றங்கள் உருவாகியிருக்கலாம் என உறுதியானதோர் ஊகம் எழுந்திருக்கலாம்.

## இளவரசன் விஜயன் உள்ளிட்ட 700 பேர்

### முதல் ஆரியக் குழு

இலங்கைக்கு வருகை தந்த முதல் ஆரியக் குழுவாக, விஜயன் உள்ளிட்ட எழுநூறு பேர்கள் இந்தியாவின் சிங்கபுரத்தில் வாழ்ந்தனர். விஜயன் தனது இளமைக் காலத்தில் மக்களுக்கு பெரும் கொடுமைகளையும் துன்பங்களையும் விளைவித்தான். இதனால், விஜயனையும் அவனது நண்பர்களையும் அந்நாட்டு மன்னன் சிங்கபுரத்திலிருந்து வெளியேற்றியதாக குறிப்பிடப்படுகின்றது.

கி.மு. 543 ஆம் ஆண்டளவில் இவர்கள் இலங்கையில் தரை இறங்கிய காலப்பகுதி புத்தர் ஞான ஒளி பெற்ற காலகட்டம் என்பதால் இலங்கைக்கு வந்த முதலாவது ஆரியக் குழுவினர் பௌத்த தர்மம் குறித்து அறிந்திருந்தனர் என மகாவம்சத்தின் 7 ஆம் அத்தியாயம் குறிப்பிடுகின்றது. இளவரசன் விஜயனுக்கு அரக்க கோத்திரத்தைச் சேர்ந்த அழகிய பெண்ணான குவேனியை இலங்கையில் சந்திக்க நேரிட்டது. அவள் நூல் நூற்றுக்கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. அதன்படி இங்குள்ள மக்கள் விஜயனின் வருகைக்கு முன்னரே நெசவுக் கைத்தொழிலில் ஈடுபட்டதாக கருதலாம்.




குவேனியை திருமணம் முடிப்பதாக வாக்குறுதி அளித்ததன் பேரில் அவளிடம் உதவிகளைப் பெற்றுக்கொண்ட விஜயன் இலங்கையின் அரசாட்சியை கைப்பற்றுவதற்காக, 'சிரிசவத்து' எனும் ஊரில் நிகழ்ந்த அரச விழாவிற்கு இலங்கையின் அனைத்து திசைகளில் இருந்தும் வருகை தந்த அரக்கர்களின் தலைவர்கள் அனைவரையும் விஜயன் கொன்றான். அதன் பின்னர் விஜய-தம்பபண்ணி (தாமரபரணி) என்ற பெயரில் நகரமொன்றை அமைத்து குவேனியுடன் இணைந்து ஆட்சியை நடத்தினான். இவ்விருவருக்கும் ஜீவஹத்த என்றொரு மகனும் திசாலா என்ற மகளும் பிறந்ததாக கூறப்படுகின்றது. விஜயனுடன் வருகை தந்த ஐந்து அமைச்சர்களான அவர்களின் பெயரிலேயே குடியேற்றங்களை நிறுவினர். அதன்படி அமைச்சர் அநுராத என்பவர் அநுராத கம என்றும், அமைச்சர் உபதிஸ்ஸ என்பவர் உபதிஸ்ஸ கம என்றும், அமைச்சர் உறுவெல என்பவர் அமைச்சர் உறுவெலகம என்றும், அமைச்சர் விஜித என்பவர் விஜிதகாமம் என்றும், அமைச்சர் உதேனி என்பவர் உதேனிகாமம் என்று ஐந்து குடியேற்றங்களை நிறுவினர். இக்குடியேற்றங்கள் அனைத்தும் புராதன கலாஓயாவுக்கும் மல்வத்து ஓயாவுக்கும் இடையிலேயே அமைந்தன.

## பாண்டிய நாட்டு இளவரசியும் இராஜ கன்னியர்களும்

### (இரண்டாம் ஆரியக் குழு)

இலங்கையின் மன்னனாக பட்டாபிஷேக விழாவை நடத்த வேண்டிய தேவை விஜயனுக்கு இருந்தது. அதற்கு அவன் சத்திரிய குல கன்னியை மணம் முடிக்க வேண்டும். அதற்கு இராச கன்னியரை அனுப்பும்படி மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டிய நாட்டு மன்னனுக்கு தூதனுப்பினான். அதன்படி பாண்டிய மன்னன் தனது மகளையும் பரிவார குல மங்கையர்களையும் இலங்கைக்கு அனுப்பினான். அதன் பின் விஜயன்-பாண்டிய இளவரசியை மணந்து இராஜாபிஷேகம் பெற்றுக்கொண்டான். இதன் காரணமாக அவன் குவேனியை துரத்திவிட்டதாகக் கூறப்படுகின்றது. அவள் தனது உறவினர்களான அரக்க கோத்திரத்தாருடன் வாழ லங்காபுர நகருக்குச் சென்றபொழுதிலும் அவள் தனக்கு துரோகம் இழைத்ததாக கூறி விஜயன் குவேனியை கொலை செய்தான். அவளின் இரு பிள்ளைகளும் மலய இரட்டைக்குத் தப்பிச் சென்றனர். பாண்டிய இளவரசியுடன் வந்த ஏனைய பாண்டிய நாட்டு குலக் கன்னியர்கள் விஜயனின் ஏனைய நண்பர்களை திருமணம் முடித்தனர். அதன்பின் அவர்களின் பிள்ளைகள் பிறந்து வம்சம் வளர்ந்து ஆரியக் குடியேற்றம் விரிவடைந்தது.

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்

பெயர்: ..............................................

01) கீழுள்ள பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

சிறிய குளம். அதில் நீர் நிறைந்திருந்தது. மீன்களும் நிறைந்திருந்தன. அவை துள்ளிக் குதித்தன. அதில் இருந்த சில கொக்குகள் தமக்குத் தேவையான உணவு கிடைத்துவிட்டது என்றெண்ணி மிகவும் குதூகலித்தன. எங்கிருந்தோ விரைவாகப் பறந்து வந்த மீன்கொத்திப் பறவையொன்று மீனைக் கொத்திக் கொண்டு பறந்தது.

1. மீன்கள் எங்கே காணப்பட்டன?
   ..................................................................
2. பந்தியிலுள்ள பெயரடைமொழி ஒன்று தருக.
   ..................................................................
3. விரைவாக வந்த பறவை எது?
   ..................................................................
4. 'விரைவாக' என்ற சொல்லுக்கு ஒத்த கருத்துச் சொல் தருக.
   ..................................................................
5. பந்தியிலுள்ள இணை மொழி ஒன்று தருக.
   ..................................................................
6. கொக்குகள் ஏன் குதூகலித்தன?
   ..................................................................

02) பின்வரும் ஒருமைச் சொற்களுக்கு பன்மைச் சொற்கள் தருக.

1. புல் - ..................................
2. கல் - ..................................
3. முள் - ..................................
4. மரம் - ..................................
5. நான் - ..................................

03) பெயராகவும் வினையாகவும் வரும் சொற்களின் கீழ் கீறிடுக.

தலை, படி, ஆடு, மாடு, வீடு, ஓடு, அலகு, கூடு, வலை, மலை

04) பின்வரும் சொற்களை வைத்து வாக்கியங்கள் அமைக்க.

1. அறை
   பெயர்: ..........................................................
   வினை: ..........................................................




2. தை
   பெயர்: ..........................................................
   வினை: ..........................................................

05) பின்வரும் ஆண்பால் சொற்களுக்கு பெண்பால் சொல் தருக.

1. மாணவன் : ..................................
2. ஆண் : ..................................
3. தலைவன் : ..................................
4. குறவன் : ..................................
5. வேடன் : ..................................

06) பின்வரும் தன்மைச் சொற்களுக்கு முன்னிலைச் சொற்கள் தருக.

1. நான் - ..................................
2. நாங்கள் - ..................................
3. எனது - ..................................

07) பின்வரும் இறந்தகால சொற்களுக்குப் பொருத்தமான நிகழ்கால சொற்களைத் தருக.

1. பாடினான் - ..........................................................
2. சென்றோம் - ..........................................................
3. அழுதது - ..........................................................
4. பாய்ந்தது - ..........................................................
5. படித்தான் - ..........................................................

08) பின்வரும் சொற்களை பெயரெச்சம், வினையெச்சம் என வேறுபடுத்தி எழுதுக.

விழுந்த, சிரித்து, எழுதி, படித்த, சரிந்து, அழகிய

| பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஆரியரின் வருகை

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

## இளவரசன் பண்டுவாசுதேவ குழுவினரின் வருகை

(மூன்றாவது ஆரியக் குழு)

விஜயனின் பின் அரசாட்சி புரிவதற்கு அவனுக்கு பிள்ளைகள் இன்மையால் சிங்கபுரத்தில் வாழ்ந்த தனது மூத்த சகோதரனாகிய சுவித்தன் என்பவனிடம் அவனின் மகன்மார்களில் ஒருவனை இலங்கைக்கு அனுப்பும்படி கேட்டு ஓலை அனுப்பினான். அதன்படி சுவித்தனின் இளைய மகனாகிய பண்டுவாசுதேவனை இலங்கைக்கு அனுப்பினான். அவனுடன் மேலும் முப்பது இளவரசர்கள் புராதன மாக்கந்துறை ஓயாவுக்கு வந்தனர். பண்டுவாசுதேவன் இலங்கைக்கு வரும்பொழுது மன்னன் விஜயன் இறந்து விட்டான். உபதிஸ்ஸ என்ற அமைச்சரே, அரச கருமங்களை ஆற்றி வந்தார். பண்டுவாசுதேவன் உபதிஸ்ஸகமவுக்குச் சென்று உபதிஸ்ஸவிடம் இருந்து அரசாட்சியைப் பெற்றுக் கொண்டான்.



## இளவரசி புத்தகச்சாயனா உள்ளிட்ட குழுவினரின் வருகை

(நான்காவது ஆரியக் குழு)

பண்டுவாசுதேவனின் முடிசூட்டும் விழாவிற்காக வட இந்தியாவின் ஷாக்ய குடியிருப்பில் இருந்து பண்டுஷாக்ய மன்னனின் மகளாகிய இளவரசி புத்தகச்சாயனா இலங்கைக்கு வருகை தந்தாள். அவளுடன் முப்பது பேர் கொண்ட ஒரு குழுவும் இலங்கைக்கு வந்தது. அவர்களிடையே அவளின் சகோதரர்கள் ஆறுபேரும் இருந்தனர். இச்சகோதரர்கள் அறுவரின் பெயர்களும் விஜயனுடன் வருகைதந்த அமைச்சர்களின் பெயர்களுக்கு ஒத்ததாக இருந்தன. அவர்கள் தத்தமது பெயர்களில் இலங்கையின் கிழக்கு மற்றும் தென் கிழக்கில் குடியிருப்புகளை அமைத்தனர். அநுராத-அநுராதகாமம், ரோஹன-ரோஹனகாமம், தீகாயு- தீககாமம், இராம-இராமகாமம், உபதிஸ்ஸ- உபதிஸ்ஸ காமம், விஜித- விஜிதகாமம் என குடியிருப்புகளை அமைத்தனர். பண்டுவாசுதேவனுக்கும் புத்தகச்சாயனாவுக்கும் பத்து புதல்வர்களும் ஒரு புதல்வியும் இருந்தனர். பண்டுவாசுதேவனுக்குப் பின் உபதிஸ்ஸகாமத்தை தலைநகராக்கி அவனின் மூத்த புதல்வனாகிய இளவரசன் அபயன் அரசாண்டான்.

## ஆரம்பகால ஆரிய குழுக்களின் ஆட்சி மையம்

இராசரட்டை நாகரிகத்தில் ஆரம்ப ஆரிய மன்னர்களில் விஜயன் (கி.மு. 543-505), தம்மென்னா எனும் இடத்தை இராசதானியாகக் கொண்டு ஆட்சி செய்தான். அதன்பின்னர் விஜயனின் அமைச்சரான உபதிஸ்ஸ, உபதிஸ்ஸகாமத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான்.

## பண்டுகாபய மன்னன்

பண்டுகாபயனே, அநுராதபுரத்தை தலைநகராக்கிய முதல் மன்னனாவான். மன்னன் அபயன் உபதிஸ்ஸ காமத்தில் ஆட்சிசெய்யும்போதே, பண்டுகாபயன் அரசாட்சியை பெறும் முயற்சியுடன் செயற்பட்டான். ஆட்சியை பெறுவதற்காக தனது தாயாகிய உன்மாத சித்ராவின் சகோதரர்களுடன் (பண்டுகாபயனின் மாமனார்களுடன்) போரிட வேண்டியிருந்தது.

அந்த யுத்தங்களின்போது, பண்டுகாபயனுக்கு அரக்கர்களின் பேராதரவு கிடைத்தது. காலவேல, சித்தராஜ, சேத்தியா, வளவாமுகி ஆகிய அரக்கர் கோத்திரத்தார்கள் தனக்கு உதவியமையால் பண்டுகாபயன் அரசாட்சியை பெற்றபின் அவர்களுக்காக தேவாலயங்களை நிறுவியதாக வரலாற்று குறிப்புகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக, இந்நாட்டில் திட்டமிட்ட நிர்வாக கட்டமைப்பு பண்டுகாபய மன்னனின் காலத்திலேயே ஆரம்பமாகியது. அவன் அபயவாவியை (பசவக் குளம்) கட்டி விவசாயத்தை விருத்தி செய்தான். இலங்கையில் முதன்முதலாக கிராம எல்லைகளை வகுத்தது அவனே. அக்காலத்தில் இலங்கையில் பௌத்த மதம் அறிமுகமாகாததால் பண்டுகாபய மன்னன் காலத்தில் இந்நாட்டின் மக்கள் பன்முகத் தன்மை கொண்ட பல சமயங்களை பின்பற்றியதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

பண்டுகாபயனுக்குப் பின் மூத்த சிவன் மன்னனும் அவனுக்குப் பின் தேவநம்பிய தீசன் என்றும் அரச வம்சம் உருவாகின. தேவநம்பிய தீசனின் காலத்தில் மஹிந்த தேரரின் வருகை இடம்பெற்றதோடு, பௌத்த மதம் இந்நாட்டில் அறிமுகமானது. இதனால், மக்களின் கலாசாரம் வேறொரு பாதைக்கு மாறியது. பல சமய அனுஷ்டானங்கள் குறைவடைந்து பௌத்த மதம் முக்கிய இடத்தை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இரஞ்சித்ஜெயகர்

# புவியின் உட்பகுதி




பூமியின் மேற்பகுதி மற்றும் வெளியில் தோற்றமளிக்கும் பிரதேசங்கள் குறித்து பல தகவல்களை மனிதன் அறிந்திருந்தாலும் ஒப்பீட்டு அளவில் பூமியின் உட்பகுதி குறித்து குறைவான தகவல்களையே மனிதன் பெற்றுள்ளான்.

பூமியின் மேற்பரப்பிலிருந்து உள்ளே மத்திய பகுதி வரை அதன் ஆழம் சுமார் 3940 மைல்களாகும். அதன்படி பூமியின் உட்பகுதியை அதன் அமைப்பை மையமாகக் கொண்டு ஐந்து பிரிவுகளாகப் பிரிப்பர். அவை மேலோடு (Crust), மேல் மூடகம் (Upper Mantle), மூடகம் (Mantle), வெளி கருவம் (Outer core), உட்கருவம் (Inner core) என்பனவாகும். இவை அனைத்தும் இப் பெயர்களின் வரிசைப்படியே பூமியின் உட்பகுதியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மேலோடு

பூமியின் மேலோடு சுமார் 20 மைல்களாகும். இதனையே புவியோடு என்பர். அதன் வெப்பநிலை 1000 பாகை செண்டிகிரேட் ஆகும். இந்த வெப்பத்தில் எத்தகைய பாறையும் சிதைந்துவிடும். அதற்குக் கீழே




1800 மைல் ஆழம் வரை உள்ள பகுதி 'கவசம்' ஆகும். இதனையே மூடகம் என்பர். அடுத்து 1800 மைல்களுக்குக் கீழேயுள்ள பகுதி பூமியின் மத்திய பகுதியாகும். இதனை உட்கருவம் என்று அழைப்பர்.

## மொகோரோவிசிக்

பூமியின் மேலோடுக்கும் மூடகத்திற்கும் இடைப்பட்ட பகுதியே மொகோரோவிசிக் எல்லை என்று அழைக்கப்படுகிறது. இதனை யூகோஸ்லேவிய விஞ்ஞானியாகிய ஏ.மொகோரோவிசிக் கண்டுபிடித்தமையால் இதற்கு இப்பெயர் வழங்கப்பட்டது. புவியின் மையப்பகுதி முழுவதும் 'திரவப்பொருள்' என்று விஞ்ஞானிகளில் சிலர் கருதுகின்றனர். வேறு சில விஞ்ஞானிகளோ, பூமியின் மையப்பகுதியை 'நடுமையம்' 'வெளி மையம்' என இரண்டாகப் பிரித்துக் கூறுகின்றனர்.

நடு மையப் பகுதியை போர்த்தியுள்ள வெளிமையப் பகுதியானது, உருகிய இரும்பு- நிக்கல் குழம்பு வடிவில் உள்ளது. இது கொடிய வெப்பத்தைக் கொண்டது. இங்குள்ள அழுத்தம் புவியின் மேற்புறத்தைவிட 20லட்சம் மடங்கு அதிகமாகும்.

(-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கோட்டை















**1543** இல் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த 'மாட்டின் அபோன்ஸ் த சூசா' உள்ளிட்ட போர்த்துக்கேயக் குழுவே யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய முதலாவது போர்த்துகேயர் ஆவர். இவர்கள் 1618 இல் யாழ்ப்பாணத்தை முழுமையாக கைப்பற்றியதோடு, அங்கு சில கோட்டைகளையும் அமைத்தனர். அந்தவகையில், யாழ்ப்பாணக் கோட்டைக்கு மேலதிகமாக, ஆனையிறவு, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, பூநகரி, மன்னார் ஆகிய இடங்களிலும் கோட்டைகளைக் கட்டினர். அவற்றுள் முதன்மையானது யாழ்ப்பாணக் கோட்டை ஆகும்.

இக்கோட்டைக்குள் இருந்த மிக முக்கிய கட்டடமாக குரூஸ் கெர்க் (Kruys Kerk) எனும் ஒல்லாந்த தேவாலயம் திகழ்கின்றது. தேவாலயத்தின் முகப்புச் சுவரில் அது கட்டப்பட்ட ஆண்டாக 1706 ஆம் ஆண்டு பொறிக்கப்பட்டுள்ளது. எனினும், தேவாலயத்தில் காணப்படும் கல்லறையில் உள்ள கல்வெட்டுக்களில் 1660 ஆம் ஆண்டென பொறிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, இங்கு பழமையான போர்த்துக்கேய, கத்தோலிக்க தேவாலயம் பின்னர் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ தேவாலயமாக ஒல்லாந்தரால் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு, வைத்தியசாலை, சிறைக்கூடங்கள், இராணி மாளிகை, தேவாலயம், பாடசாலை, பொலிஸ், மேடை உள்ளிட்ட சகல அம்சங்களையும் உள்ளகத்தே அமைக்கப்பட்ட முழுமையானதொரு சிறிய நகரமே யாழ்ப்பாணக் கோட்டை என்பது குறிப்பிடத்தக்கது.

செங்கற்களால் கட்டப்பட்ட சற்சதுர தூண்கள் மீது அமைந்துள்ள ஓட்டுக் கூரையுடன் கூடிய கோபுரத்தில் கி.பி 1646 என பொறிக்கப்பட்டுள்ள வெண்கல மணி ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. இந்த ஆலய மணி போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டதாகும். இலங்கையில் ஒல்லாந்தர் தேவாலயமொன்றில் ஓட்டுக்கூரையுள்ள ஒரே ஒரு ஆலய மணிக் கோபுரம் இதுவேயாகும். இக்கோட்டையின் ஆலய மணி கோபுரத்திற்கு அருகில் இருந்து பார்த்தால் முழு யாழ்ப்பாண மாநகரமும் நமது பார்வையில் விரிந்து செல்வதைக் காணலாம். கோட்டையின் பின்புறம் இந்து மகா சமுத்திரமும் முன்புறம் துரையப்பா விளையாட்டுத் திடலும் அதற்கு அப்பால் யாழ்ப்பாண நூல் நிலையம், யாழ்ப்பாண மத்திய கல்லூரி என்பனவும் அமைந்துள்ளன.

(அ)







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எகிப்திய பிரமிட்கள் பற்றி தீர்க்கப்படாத ரகசியங்கள்

உலகில் பிரமிட்களுக்கு பெயர்பெற்ற நாடு எகிப்து ஆகும். பண்டைய உலகின் மர்மமான வரலாற்று அடையாளமாகவே எகிப்திய பிரமிட்கள் கருதப்படுகின்றன. இந்த பிரமிட்களை உருவாக்கியவர்கள் யாவர்?, என்ன காரணத்திற்காக இவை உருவாக்கப்பட்டுள்ளன?, இந்தப் புதிரான கட்டட அமைப்பு மறைத்து வைத்திருக்கும் ரகசியங்கள் எவை? போன்ற விடயங்கள் குறித்து விஞ்ஞானிகள், தொல்லியல் ஆய்வாளர்கள், வரலாற்று ஆய்வாளர்களிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. எவ்வாறாயினும், பிரமிட்கள் பற்றிய ரகசியங்கள் இன்னும் தீர்ந்ததாக இல்லை.

பண்டைய கால எகிப்தை ஆட்சி செய்த மன்னர்களின் (ஃபாரோக்கள்) இறப்பினை அடுத்து, அவர்களின் சடலத்தையும் பாவித்த பொருட்களையும் பாதுகாப்பாக வைத்திருக்கவே இந்த பிரமிட்கள் கட்டப்பட்டதாக பொதுவானதொரு கருத்து நிலவுகின்றது. எனினும், உண்மையிலேயே இந்த விடயங்களுக்காகத்தான் பிரமிட்கள் கட்டப்பட்டுள்ளனவா? என்ற கேள்வி பலரையும் சிந்திக்க வைக்கின்றது. அத்துடன், இந்த பிரமிட்களை நிர்மாணிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள பாரிய கற்கள் எங்கிருந்து, எப்படிக் கொண்டுவரப்பட்டிருக்கும்? என்பது பற்றியும் ஆய்வாளர்கள் இன்னும் தெளிவான முடிவிற்கு வரவில்லை என்றே கூறப்படுகின்றது.





ஒரு சிலர் பிரமிட்கள் மனிதர்களால் கட்டப்படவில்லை என்றும் வேற்றுக்கிரகவாசிகளால்தான் அவை கட்டப்பட்டுள்ளன என்றும் கூறுகின்றனர். இந்தக் கூற்று உண்மையானதாக இருக்கலாம் என்று கூறும் ரஷ்ய விஞ்ஞானிகள், செவ்வாய் கிரகத்தில் சைடோனியா எனக் கருதப்படும் பகுதியில் காணப்படும் பிரமிட் போன்ற அமைப்புகளுக்கும் எகிப்தின் பிரமிட்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கக்கூடும் என்றும் கருதுகின்றனர். இவை தவிர, பிரமிட்களின் உள் அறைகள் மற்றும் குறுக்கும் நெடுக்குமாக அமைந்துள்ள சுரங்கப் பாதைகள் என்பனவற்றின் அமைப்பு முறைகள் குறித்த மர்மங்களும் இதுவரை கண்டறியப்படவில்லை. எவ்வாறாயினும்,




பிரமிட்கள் பற்றிய ரகசியங்களைக் கண்டறிவதற்கான முயற்சிகளில் ஆய்வாளர்களும் விஞ்ஞானிகளும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
விலை Rs. 10/=
wijeyanewspapers
helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror
www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகின் பிரதான மதங்கள்

# பௌத்த



## எட்டு நெறிமுறைகள்

- நன்நோக்கு
- நல்லெண்ணம்
- நன்மொழி
- நற்செயல்
- நல்வாழ்க்கை
- நல்ல முயற்சி
- நற்கடைப்பிடிப்பு
- நற்தியானம்

உலகின் மிகவும் பழமையான மதங்களில் ஒன்றான பௌத்த மதமானது, ஒரு மதம் என்பதைவிட தத்துவமாகவே கருதப்படுகின்றது. எக்காலத்திற்கும் பொருந்தும் மதமாகவும் இது கருதப்படுகின்றது. பௌத்த மதம், தற்போதளவில் மேலைத்தேய மக்களையும் ஈர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இளவரசர் சித்தார்த்தர் எனும் இயற்பெயருடைய கௌதம புத்தரின் துறவு வாழ்க்கையை அடுத்தே, பௌத்த மதத்தின் ஆரம்பம் இடம்பெறுவதாக கருதப்படுகின்றது. வாழ்க்கை முழுமைபெறுவதற்கு முக்தி நிலையை எவ்வாறு அடைவது என்பதனை, சாதாரண மக்களுக்கும் புரியும்படி இவர் போதித்தார். பௌத்த மதத்தை பின்பற்றுபவர்கள் 'பௌத்தர்கள்' என அழைக்கப்படுகின்றனர். பௌத்தர்கள் புத்தரை புனிதராகக் கருதுகின்றனர். பௌத்த மதத்தை பின்பற்றுபவர்கள் பெரும்பான்மையாக ஆசியாவிலேயே வாழ்கின்றனர். உலகம் முழுவதும் இந்த மதத்தை பின்பற்றும் மக்கள் தொகை சுமார் 320 மில்லியன் ஆகும் எனக் கருதப்படுகின்றது.

## போதனை



மகாயான போதிசத்துவர் சிலையொன்று

புத்தர் நான்கு உண்மைகளைப் போதித்துள்ளார். இவற்றின்மூலம் துன்பம் பற்றிய பௌத்த தரிசனமும் முக்தியடைவது எப்படி? என்பதும் போதிக்கப்படுகின்றன. மனிதன் இன்பத்தை நாடிச் செல்வதே, துன்பத்திற்குக் காரணமாக அமைகின்றது. முக்தியடைதல் என்பது இந்த துன்பங்களிலிருந்து விடுபடுவதாகும். முக்தியடைய வேண்டுமாயின், துன்பத்தைப் போக்க உதவும் எட்டு நெறி முறைகளைக் கடைப்பிடித்து வாழ வேண்டும்.


## வினைப்பயன்

பௌத்தர்கள் வினைப்பயன் (கர்ம விதி) மீது நம்பிக்கை கொண்டுள்ளனர். அதாவது, உடலாலும் உள்ளத்தாலும் சொற்களாலுமே நல்லவையும் தீயவையும் இடம்பெறுகின்றன.இதன்படியே வினைப்பயன் நம்மை வந்தடைகின்றது. மனிதன் முன்-பின் செய்கின்ற பாவச்செயல்களும் புண்ணியச்செயல்களும் இந்தப் பிறப்பிலும் இதன் பின்னரான பிறப்புகளிலும் அவனை நாடி வருகின்றன.



## வழிபாடுகள்

பௌத்தர்கள் வீடுகளிலும் விகாரைகளிலும் புத்தரின் சிலைகளை வைத்து வணங்குகின்றனர். வீடுகளிலும் விகாரைகளிலும் புத்தர் சிலையினை வைத்திருப்பதன் நோக்கம்: புத்தர் வாழ்ந்த முறையினைப் பின்பற்றி வாழ்வதற்கு சாதாரண மக்களையும் ஊக்கப்படுத்துவதாகும். பௌத்தர்கள் புத்தர் சிலையின் முன்பாக விழுந்து வணங்கி வழிபாடுகளை மேற்கொள்வர். வழிபாட்டின் போது பூக்கள், நீர், உணவு என்பன பயன்படுத்தப்படுவதுடன், வாசனை தரும் ஊதுபத்திகளும் ஏற்றப்படுகின்றன. தேரவாத பௌத்தத்தினை தவிர, மகாயான பௌத்தம் மற்றும் இதர பௌத்த பிரிவுகளில் மெழுகுவர்த்தி ஏற்றப்படுவதுடன், உருவச் சிலையினை சூழ ரோஜா இதழ்களைத் தூவுதல் போன்ற நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன.




## சமய நிகழ்வுகளும் பண்டிகைகளும்

பௌத்த விகாரைகளில் இடம்பெறும் மத அனுஷ்டானங்களில் சூத்திரங்கள் சொல்லுதல், பிரித் ஓதுதல் மற்றும் புத்த பெருமானுக்கு பூஜைகளை மேற்கொள்ளல் என்பனவும் அடங்குகின்றன. பௌத்த விகாரைகளில் புத்த தர்மம் போதிக்கப்படுகின்றது. பௌத்தர்கள் வருடம் முழுவதும் பண்டிகைகள், மத அனுஷ்டானங்கள் மற்றும் முக்கிய தினங்களைக் கடைப்பிடிக்கின்றனர். புத்தரின் பிறப்பு, ஞானம் பெறுதல், பரிநிர்வாணம் அடைதல் ஆகிய நிகழ்வுகளை எடுத்தியம்பும் வெசாக் பௌர்ணமி தினம் பௌத்தர்களின் முக்கியமான தினமாகக் கருதப்படுகின்றது. இது தவிர, ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தையும் சிங்களவர்கள் புனித தினமாகக் கருதுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ருவன்வெலிசேய


தர்ம சக்கரம்

# த மதம்

## பௌத்த மதத்தின் பிரிவுகள்

இந்தியாவில் ஆரம்பமான பௌத்த மதம், கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பரவியது. இன்றும் இந்த நாடுகளில் பௌத்த மக்கள் பரவலாக வாழ்கின்றனர். ஆசியாவிலும் அதன் மேற்குப்பகுதிகளிலும் பௌத்த குடியிருப்புகள் உள்ளன. பௌத்த மதத்தில் 'மகாயான' மற்றும் 'தேரவாத' என்று இரண்டு பிரதான பிரிவுகள் உள்ளன. இவற்றை தவிர, விசேட லட்சணங்களுடன்கூடிய 'நிக்காய' எனப்படும் பிரிவுகளும் உள்ளன.



## தேரவாத பௌத்தம்

புத்த பெருமானின் போதனைகளுடன் நெருங்கிய தொடர்புடையது தேரவாத பௌத்தமாகும். மியன்மார், கம்போடியா, லாவோஸ், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் தேரவாத பௌத்தமே பின்பற்றப்படுகின்றது. தேரவாத பௌத்தத்தில் புத்தர் புனிதராகக் கருதப்படுவதோடு, வேறு சிலைகளை வழிபடுவதில்லை. பௌத்தர்கள் எட்டு நெறி முறைகளைப் பின்பற்றி, உண்மையான துறவு வாழ்க்கையை கடைப்பிடிக்க முயற்சிக்கின்றனர். தமது சுய முயற்சியினால் முக்தியினை பெற முடியும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

## மகாயான

மகாயான பௌத்தம் சீனா, கொரியா, ஜப்பான், மொங்கோலியா, நேபாளம் மற்றும் திபெத் ஆகிய நாடுகளில் நிலவுகின்றது. போதிசத்துவராக மாறுவதே மகாயான பௌத்தர்களின் பிரதான நோக்கமாகும். மகாயானத்தைப் பொறுத்தவரை போதிசத்துவர்கள் என்போர், மற்றவர்களின் நலனுக்காக உதவி செய்பவர்களாகவே இருப்பர். எனவே, மகாயான பௌத்தர்கள் புண்ணிய செயல்கள் குறித்து அதிக ஆர்வம் காட்டுவார்கள்.

## சென் பௌத்த மதம்

சென் பௌத்த மதம் சீனாவில் ஆரம்பமானது. 13ஆம் நூற்றாண்டளவில் ஜப்பானிலும் பரவியது. இயற்கையுடன் நெருங்கியவாறு, அன்றாட நடவடிக்கைகளை தியானமாகக் கருதி எளிமையான வாழ்க்கையினைக் கடைப்பிடிப்பதே சென் பௌத்த மதத்தை பின்பற்றுபவர்களின் நோக்கமாகும்.

## திபெத்திய பௌத்தம்

மகாயான பௌத்த மதத்தின் ஒரு வடிவத்தினை திபெத்தில் காணலாம். பௌத்த மதத்தில் வரும் தியானம் மற்றும் உறுதி குறித்து இதில் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. மேலும், திபெத்திய பௌத்த மதத்தில் அவர்களுக்கே தனித்துவமான சில சம்பிரதாயங்கள் காணப்படுகின்றன.


வியட்நாமில் புத்த பிக்குகள் பிச்சைப் பாத்திரம் ஏந்துகின்றனர்

## புனித நூல்கள்

புத்தரின் போதனைகள், சூத்திரங்கள் அடங்கிய மத நூல்கள் பல உள்ளன.

## விகாரைகள், ஆராமைகள்

புத்த பெருமானின் சீடர்கள் மழைக்காலத்தில் தங்குவதற்கு வசதியாக நிரந்தர வாசஸ்தலங்கள் நிறுவப்பட்டன. இவை தான் ஆராமை, விகாரைகளாக மாற்றம் பெற்றன.

## பௌத்த மத வழிபாட்டுத் தலங்கள்

பௌத்த மத வழிபாட்டுத் தலங்கள் அமைப்பு முறையிலும் அலங்கார முறைகளிலும் வேறுபட்டுக் காணப்படும். இலங்கையில் சைத்ய, ஜப்பானில் பாகொட, தாய்லாந்தில் வட் என்பவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். பொதுவாக, அனைத்து பௌத்த மத வழிபாட்டுத் தலங்களிலும் புத்தர் சிலைகளைக் காண முடியும். வழிபாட்டுக்கும் பூஜைகளுக்காகவுமே இந்த சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.


கல்விகாரையில் அமர்ந்த நிலையிலான சிலை

## பௌத்த பிக்குகள்

குடும்ப உறவுகளிலிருந்து விலகி பௌத்த மதத்திற்காக தமது வாழ்நாட்களை அர்ப்பணித்து, ஆன்மீக வழியைக் கடைப்பிடித்து வாழும் பௌத்த பிக்குகள், தமக்கென சொத்துக்களை சேமிக்க மாட்டார்கள். பிறர் வழங்கும் தானங்களில் வாழ்வர். பிச்சைப் பாத்திரம் ஏந்துவர். இவர்கள் கடும் சட்டதிட்டங்களைப் பின்பற்றுபவர்களாக இருப்பதுடன்; ஆடல், பாடல், அலங்காரங்களிலிருந்து விலகியிருப்பர். உரிய வேளைகளிலேயே உணவும் உட்கொள்வர்.


தலாய் லாமா

## தலாய் லாமா

திபெத்தியர்களின் ஆன்மீக தலைவராக கருதப்படுபவர் தலாய் லாமா ஆவார். ஒவ்வொரு தலாய் லாமாவும் அதற்கு முன்பிருந்த தலாய் லாமாவின் வழி வந்தவராகவே கருதப்படுகின்றார். தற்போதைய தலாய் லாமாவாகத் திகழும் டென்சிங் கியெட்சோ, 1935 இல் பிறந்தவராவார். சீன ஆக்கிரமிப்பின் பின்னர் 1959இல் திபெத்திலிருந்து இவர் வெளியேற்றப்பட்டாலும், அந்நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த தலைவராக இவரே கருதப்படுகின்றார்.

-பிரியா


மியன்மாரின் ஷ்வேதகொன் பாகொட

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கார்ட்டூன் கதாபாத்திரங்களுக்கு உயிரூட்டும்

# உயிரினங்கள் சில...


கார்ட்டூன் தொடர்களுக்கு அடிப்படையாக அமைந்தது சித்திரக்கதைகளாகும். சித்திரக்கதைகளினூடாக பல்வேறு கதாபாத்திரங்கள் உருவாகின. மனித கதாபாத்திரங்கள் மட்டுமன்றி; பறவைகள், மிருகங்கள், மீன்கள் போன்ற உயிரினங்களை மையப்படுத்தி அறிமுகமான கதாபாத்திரங்களும் அவற்றுள் அடங்கும். அந்தவகையில், உலகப் புகழ்பெற்ற கார்ட்டூன் தொடர்களுக்கு உயிரூட்டும் சில உயிரினங்களைப் பற்றியும் அதனை மையப்படுத்தி அறிமுகமான கதாபாத்திரங்கள் பற்றியும் இங்கு நோக்குவோம்.



Looney Tunes
**coyote**

### அமெரிக்க ஓநாய்
*Canis latrans*

| | |
|---|---|
| பிரதேசம் | வட மற்றும் மத்திய அமெரிக்கா |
| உணவு | பைசன் மாடுகள், ஆடுகள், முயல்கள் |
| ஆயுட்காலம் | 06-08 வருடங்கள் |
| நிறை | 21 கிலோகிராம் |



### ஒக்டொபஸ்
*Octopoda*

| | |
|---|---|
| பிரதேசம் | பவளப்பாறைகள் நிறைந்த சமுத்திரங்கள் |
| உணவு | மீன்கள், நண்டுகள் |
| ஆயுட்காலம் | 03-05 வருடங்கள் |
| நிறை | 15 கிலோகிராம் |

spongebob squarepants
**Squidward**



Looney Tunes
**Daffy Duck**

### அமெரிக்க கறுப்பு வாத்து
*Anas rubripes*

| | |
|---|---|
| பிரதேசம் | கிழக்கு மற்றும் வட அமெரிக்கா |
| உணவு | நீர்த்தாவரங்கள், மீன்கள், தானியங்கள் |
| ஆயுட்காலம் | 03-05 வருடங்கள் |
| நிறை | 720 கிராம்-1640 கிராம் |



### க்லவுன்ஃபிஷ்
*Amphiprioninae*

| | |
|---|---|
| பிரதேசம் | இந்து மற்றும் பசுபிக் சமுத்திரங்கள் |
| உணவு | தாவர உண்ணி |
| ஆயுட்காலம் | 03 - 06 வருடங்கள் |
| நிறை | 2-4 அங்குலங்கள் |

Finding Nemo
**Nemo**



Rio
**Blu**

### லியர்'ஸ் மெகோ
*Anodorhynchus leari*

| | |
|---|---|
| பிரதேசம் | பிரேசில் |
| உணவு | லிகுரி ஃபாம் மரத்தின் விதைகள் |
| ஆயுட்காலம் | 30 - 50 வருடங்கள் |
| நிறை | 950 கிராம் |



Finding Nemo
**Anchor**

### கொம்பன் சுறா
*Sphyrnidae*

| | |
|---|---|
| பிரதேசம் | உலகிலுள்ள வெப்ப சமுத்திரங்கள் |
| உணவு | மீன்கள், கணவாய்கள் |
| ஆயுட்காலம் | 0 - 25 வருடங்கள் |
| நிறை | 580 கிலோகிராம் |



Looney Tunes
**Bulldog**

### இங்லிஷ் புல்டோக்
*Canis lupus familiaris*

| | |
|---|---|
| பிரதேசம் | பிரித்தானியா |
| உணவு | மாமிச உண்ணி |
| ஆயுட்காலம் | 08-10 வருடங்கள் |
| நிறை | 25 கிலோகிராம் |

### மென்ட்ரில்
*Mandrillus sphinx*

| | |
|---|---|
| பிரதேசம் | கெமரூன், கெபொன், கொங்கோ |
| உணவு | தாவரங்கள், பழங்கள் |
| ஆயுட்காலம் | 20 வருடங்கள் |
| நிறை | 45 கிலோகிராம் |

LionKing
**Rafiki**





### காட்டுப் பன்றி
*Sus scrofa*

| | |
|---|---|
| பிரதேசம் | யுரேசியா , வட ஆபிரிக்கா |
| உணவு | அனைத்தும் உண்ணி |
| ஆயுட்காலம் | 20 வருடங்கள் |
| நிறை | 50 - 90 கிலோகிராம் |

LionKing
**Pumba**

### கிரேட்டர் ரோட்ரனர்
*Geococcyx californianus*

| | |
|---|---|
| பிரதேசம் | தென் மேற்கு அமெரிக்கா, மெக்ஸிகோ |
| உணவு | சிறிய உயிரினங்கள் |
| ஆயுட்காலம் | 07- 08 வருடங்கள் |
| நிறை | மணிக்கு 42 கிலோமீற்றர் |



spongebob squarepants
**RoadRunner**



LooneyToones
**Taz**

### தஸ்மேனிய டெவில்
*Sarcophilus harrisii*

| | |
|---|---|
| பிரதேசம் | அவுஸ்திரேலியாவின் தஸ்மேனியத் தீவு |
| உணவு | மாமிச உண்ணி |
| ஆயுட்காலம் | 06 வருடங்கள் |
| நிறை | 08 கிலோகிராம் |

### வெட்டுக்கிளி
*Caelifera*

| | |
|---|---|
| பிரதேசம் | வெப்ப வலய மழைக்காடுகள் |
| உணவு | புல் மற்றும் தானியங்கள் |
| ஆயுட்காலம் | ஒரு வருடம் |
| நிறை | சுமார் ஒரு மீற்றர் |

Kungfu Panda
**Mantis**





### கடல் ஆமை
*Testudines*

| | |
|---|---|
| பிரதேசம் | சமுத்திரங்கள் |
| உணவு | சிறிய மீன்கள், நீர்த்தாவரங்கள் |
| ஆயுட்காலம் | 150 வருடங்களுக்கும் மேல் |
| நிறை | 700 கிலோகிராம் |

Finding Nemo
**Crush**

### ஜப்பானிய கொக்கு
*Grus japonensis*

| | |
|---|---|
| பிரதேசம் | ஜப்பான் |
| உணவு | தாவர உண்ணி |
| ஆயுட்காலம் | 30-40 வருடங்கள் |
| நிறை | 1.6 மீற்றர் |



Finding Nemo
**Crush**




Happyfeet
**Svean**

### க்ரெஸ்டட் பஃபின்
*Fratercula cirrhata*

| | |
|---|---|
| பிரதேசம் | வட பசுபிக் சமுத்திரம் |
| உணவு | மீன்கள் |
| ஆயுட்காலம் | 15 - 25 வருடங்கள் |
| நிறை | 780 கிராம் |

-ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீடுகளை அமைக்கும் முறைகளை நமது முன்னோர்கள் அறிந்துகொண்டமையினால்தான், காலநிலை மாற்றத்திற்கு ஈடுகொடுத்தல் மற்றும் விலங்குகளிடமிருந்து தற்காத்துக்கொள்ளல் போன்றவற்றுக்கு ஏற்ற விதத்திலான வீடுகள் உலகில் நிர்மாணிக்கப்படலாயின. சுவர்கள் மற்றும் கூரை என்பன வீடுகளில் காணக்கிடைக்கும் பொதுவான பாகங்களாக இருந்தாலும், இவற்றை நிர்மாணிப்பதிலும் இடத்திற்கு இடம் வெவ்வேறு மூலப்பொருட்களும் வடிவமைப்புகளும் கையாளப்படுவதைக் காணலாம். ஒரு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படும் வீடுகளின் அமைப்பானது, அப்பகுதியில் நிலவும் காலநிலை, மூலப்பொருட்கள் என்பனவற்றின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றது. இது போன்றே, பல்வேறு காரணங்களின் அடிப்படையில், உலகில் வித்தியாசமான வீடுகள் நிர்மாணிக்கப்படுவதைக் காணலாம்.

# உலகில் நிர்மாணிக்கப்படும் வீடுகள்



## மர வீடுகள்



அமெரிக்க முன்னோர்கள் முதன்முதலில் தமது வீடுகளை மரத்தினாலேயே நிர்மாணித்துக் கொண்டனர். அன்றைய காலத்தில் வீடுகள் நிர்மாணிப்புக்கு இலகுவில் பெற்றுக்கொள்ளக்கூடிய மூலப்பொருளாக மரம் காணப்பட்டமை இதற்கு ஒரு காரணமாகும். அத்துடன், அங்கு குளிர் மற்றும் காடுகள் கொண்ட பகுதிகளில் வீடுகளை நிர்மாணிப்பதற்கு மரமே பொருத்தமானதாகும். மேலும், மரத்தினாலான வீடுகள் வெப்பத்தை உறிஞ்சக்கூடியவையாகவும் குளிரைக் கட்டுப்படுத்தக்கூடியவையாகவும் இருந்தமையாலும் இத்தகைய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன.

## களிமண் வீடுகள்



நியூ மெக்ஸிகோ மக்களின் பாரம்பரிய வீடுகள் களிமண்ணினால் நிர்மாணிக்கப்பட்டவையாக உள்ளன. இங்கு மழைவீழ்ச்சி குறைவு என்பதனால், களிமண்ணால் வீடுகளை நிர்மாணிப்பதும், அவற்றைப் புதுப்பிப்பதும் இலகுவான காரியமாகும். தடிப்பான சுவர் மற்றும் சிறிய ஜன்னல்கள் உள்ளமையினால் வீட்டினுள் சூரிய வெப்பம் தங்குவதில்லை.

## படகு வீடுகள்



சனநெரிசல் மிக்க நகரப்பகுதிகளில் வீடுகளை நிர்மாணிக்க நிலப்பகுதிகள் குறைவாக உள்ளமையினால், இவ்வாறான பகுதிகளிலுள்ள நீர்நிலைகளில் படகு வீடுகளைப் பயன்படுத்துவது சிறந்த தீர்வாக அமையும். இதனை 'ஹவுஸ்போட்' (houseboat) என்பர்.

## தொடர்மாடி வீடுகள்



நகரங்களில் உள்ள தொடர்மாடி குடியிருப்புத் தொகுதிகள், சிறிய நிலப்பரப்பில் நூற்றுக்கணக்கான குடும்பங்களை குடியமர்த்த உதவுகின்றன. இந்த கட்டடங்கள் மிகவும் நீளமாகவும் உயரம்கூடியதாகவும் நிர்மாணிக்கப்படுகின்றன.

## நடமாடும் வீடுகள்



நடமாடும் வீடுகளின் ஆரம்பமாக கருதப்படுவது, தொழிலாளர்கள் இடத்திற்கு இடம் கொண்டு சென்ற கேரவன் வாகனம் ஆகும்.

## குடிசை தொகுதிகள்



பெரும்பாலான நகரங்களில் குடிசை தொகுதிகள் இருப்பதைக் காணலாம். சில நகரங்களில் பரம்பரையாக வசித்து வரும் ஏழைகளின் வசிப்பிடமாக குடிசை தொகுதிகள் உள்ளன. மேலும், தொழில்வாய்ப்பு தேடி நகரங்களுக்கு வருபவர்களில், தமக்குரிய வசிப்பிடங்களை தேடிக்கொள்ள முடியாதவர்கள் வசிக்கும் பகுதிகளாகவும் குடிசை தொகுதிகள் உள்ளன.

## எதிர்கால வீடுகள்



நவீன கட்டட நிர்மாணங்கள் எரிபொருள் விரயத்தினை தவிர்த்து, அதனை சேமிப்பதை அடிப்படையாகக் கொண்டே நிர்மாணிக்கப்படுகின்றன. அந்தவகையில், காற்று மற்றும் சூரிய சக்தியினை சேமித்துப் பயன்படுத்தும் வகையில் கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுவதைக் காணலாம்.

## நில அதிர்வுக்கு ஈடுகொடுக்கும் வீடுகள்



உலகின் சில பகுதிகளில் அடிக்கடி நில அதிர்வுகள் இடம்பெறுவதை நாம் அறிகின்றோம். எனவே, இப்பகுதிகளில் நில அதிர்வுகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் கட்டடங்களை நிர்மாணிக்கும் தொழில்நுட்ப முறைகள் தற்போது பல நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வருவதோடு, அதற்கேற்ற வகையில் நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மாலாவுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

අම්මා: දුව, හවසට ඉස්පිරිතාලයට යමු ද?
துவ, ஹவசட்ட இஸ்பிரிதாலயட்ட யமு த?
அம்மா: **மகள், பின்னேரம் வைத்தியசாலைக்குப் போவோமா?**

මාලා: ඒ ඇයි අම්මේ?
ஏ எய் அம்மே?
மாலா: **அது ஏன் அம்மா?**

අම්මා: පුංචි අම්මාගේ දුවට සනීප නැතිව ඉස්පිරිතාලයේ නවත්තලා.
புன்சி அம்மாகே துவட்ட சனீப நெதிவ இஸ்பிரிதாலயே நவத்தலா.
அம்மா: **சித்தியின் மகள் சுகவீனம் காரணமாக, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.**

මාලා: මොනවා වෙලා ද අම්මේ?
மொனவா வெலா த அம்மே?
மாலா: **என்ன நடந்துள்ளது அம்மா?**

අම්මා: එයාට උණ අඩුවෙන්නේ නැහැලු.
எயாட்ட உண அடுவென்னே நெஹெலு.
அம்மா: **அவளுக்குக் காய்ச்சல் குறைவதில்லையாம்.**

ඩොක්ටර්ස්ලා ඩෙංගු කියලා සැක කරනවලු.
டொக்டர்ஸ்லா டெங்கு கியலா செக கரனவலு.
**வைத்தியர்கள் டெங்கு என சந்தேகப்படுகிறார்களாம்.**

මාලා: පුංචි අම්මලාගේ ගෙදර, වත්ත පිරිසිදුයිනේ අම්මා.
புன்சி அம்மலாகே கெதர, வத்த பிரிசிதுய்னே அம்மா.
மாலா: **சித்தியின் வீடு, தோட்டம் சுத்தமாகத்தானே இருக்கின்றன அம்மா.**

අම්මා: ඒ වුණාට ඩෙංගු මදුරුවා විද්දාම මොනව කරන්නද?
ஏ வுணாட்ட டெங்கு மதுருவா வித்தாம மொனவ கரன்னத?
அம்மா: **ஆனாலும் டெங்கு நுளம்பு கடித்தால் என்ன செய்வது?**

මාලා: ඉස්පිරිතාලයේ නවත්තල තියෙන්නේ කවදාද?
இஸ்பிரிதாலயே நவத்தல தியென்னே கவதாத?
மாலா: **வைத்தியசாலையில் அனுமதித்திருப்பது எப்போது?**

අම්මා: ඊයෙලු. සැරින් සැරේ ලේ පරීක්ෂා කරනවලු.
ஈயெலு. செரின் செரே லே பரீக்ஷா கரனவலு.
அம்மா: **நேற்றுத்தானாம். அடிக்கடி இரத்தம் பரிசோதிக்கிறார்களாம்.**

මාලා: පවු නංගී. අපි හවස යමු අම්මේ.
பவு நங்கி. அப்பி ஹவச யமு அம்மே.
மாலா: **பாவம் தங்கச்சி. நாம் பின்னேரம் போவோம் அம்மா.**

**பயிற்சி**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

1. வைத்தியசாலைக்குப் போவோமா?
 ..................................................
2. என்ன நடந்துள்ளது அம்மா?
 ..................................................
3. டெங்கு என்று சந்தேகப்படுகிறார்கள்.
 ..................................................




## தன் கூற்று வாக்கியம் - பிறர் கூற்று வாக்கியம்
## Direct speech & Indirect speech

உடன்பாடு வாக்கியங்களை, தன் கூற்று நிலையில் இருந்து, 'பிறர் கூற்று' நிலை வாக்கியங்களாக மாற்றியமைக்கும் முறை பற்றி மேலும் இங்கே கற்போம்.

அ) Ragu said, "I must go to the bank tomorrow".
ரகு கூறினான், "நான் நாளை வங்கிக்குக் கட்டாயம் போக வேண்டும்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஆ) Ragu said that he had to go to the bank the next day.
தான் நாளை வங்கிக்குக் கட்டாயம் போக வேண்டுமென ரகு கூறினான்.
(பிறர் கூற்று வாக்கியம்- Indirect speech)

மேற்படி (அ) தன் கூற்று வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள 'I' எனும் பிரதிப் பெயர்ச்சொல் (Pronoun) 'he' என மாற்றப்பட்டுள்ளதையும், 'must' எனும் நிகழ்கால வடிவத்தில் உள்ள துணை வினைச்சொல் 'had to' என இறந்தகாலத்துக்கு மாற்றப்பட்டுள்ளதையும் பிறர் கூற்று வாக்கியத்தில் அவதானிக்கலாம்.

★ **மேலும் ஒரு விளக்கம்:** தன் கூற்று வாக்கியத்தில் இடம்பெறுகின்ற 'must' எனும் நிகழ்கால துணை வினைச்சொல், சில சந்தர்ப்பங்களில், பிறர் கூற்று வாக்கியத்தில் மாற்றமின்றி 'must' என்றே கையாளப்படலாம் என்ற ஆங்கில இலக்கண நூலாசிரியர்களின் கூற்றையும் நாம் ஒதுக்கிவிடக் கூடாது.

★ அவ்வாறாயின், இந்தப் பிறர் கூற்று வாக்கியம் பின்வருமாறு அமையும்.

இ) Ragu said that he must go to the bank the next day.
தான் நாளை வங்கிக்குக் கட்டாயம் போக வேண்டுமென ரகு கூறினான்.
(பிறர் கூற்று வாக்கியம்- Indirect speech)

★ 'should' எனும் துணை வினைச்சொல் கையாளப்படுதல்

ஈ) Ragu said, "I should go to the bank tomorrow".
ரகு கூறினான், "நான் நாளை வங்கிக்குக் கட்டாயம் போக வேண்டும்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

உ) Ragu said that he should go to the bank the next day.
தான் நாளை வங்கிக்குக் கட்டாயம் போக வேண்டுமென ரகு கூறினான்.
(பிறர் கூற்று வாக்கியம்- Indirect speech)

**குறிப்பு:** தன் கூற்று வாக்கியத்தில் கையாளப்படும் 'should' எனும் துணை வினைச்சொல், பிறர் கூற்று வாக்கியத்திலும் (எதுவித மாற்றமும் இன்றி) 'should' என்றே கையாளப்பட வேண்டும் என்பது ஆங்கில இலக்கண விதி ஆகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






# அசைக்க முடியாத சாதனையாளனின் ஓய்வு

'ரியோ ஒலிம்பிக் 2016' போட்டிகள் நிறைவுபெற்றுவிட்டன. கூடவே, ஜமெய்க்காவின் தடகள வீரர் உசேன் போல்ட்டும் தனது ஓய்வை அறிவித்து விட்டார். ஓய்வு பெற்றாலும் போல்ட்டின் சாதனைகள் ஓயாத நினைவுகளாகவே இருக்கும்.

2008'பீஜிங்',2012 'லண்டன்', 2016 'ரியோ டி ஜெனிரோ' ஆகிய ஒலிம்பிக் போட்டிகளில் 100 மீற்றர், 200 மீற்றர், 100x4 அஞ்சல் ஓட்டம் ஆகிய போட்டி களில் தொடர்ச்சியாக தங்கப் பதக்கங்களை வென்ற சாதனையாளர் இவர்.

உலகின் வேகமான மனிதன் தானே என்பதை நிரூபித்துவிட்டார். ரியோ 2016 போட்டியில் 100 மீற்றரை 9.81, 200 மீற்றரை 19.78, 10x4 மீற்றரை 37.27 செக்கன்களிலும் ஓடி முடித்தே அசைக்க முடியாத சாதனையை ஏற்படுத்தியுள்ளார் போல்ட்.

"சகல சுமைகளையும் எனது தோளிலிருந்து இறக்கியாக்கி விட்டது. எவரும் நிகழ்த்தாத ஒரு சாதனையை நிகழ்த்த வேண்டும் என்று திட்டமிட்டிருந்தேன். அதன்படி வியர்வை சிந்திப் பல தியாகங்களை செய்து எவராலும் சமப்படுத்த முடியாத சாதனையை நிகழ்த்தி விட்டேன். நான் தொடர்ந்தும் போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டும் என்று மக்கள் விரும்புவதை நான் அறிவேன்.

மன்னியுங்கள். இதுவே நான் ஓய்வு பெறுவதற்கான சரியான தருணம்" இவ்வாறு உசேன் போல்ட் தெரிவித்துள்ளார்.

# அடுத்த ஒலிம்பிக்கில் 100 மீற்றரில் வெல்பவர் யார்?

அடுத்த ஒலிம்பிக் போட்டிகள் 2020 ஆம் ஆண்டில் ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெறவுள்ளது. உசேன் போல்ட் ஓய்வு பெற்றுள்ள நிலையில் 'டோக்கியோ ஒலிம்பிக் 2020' இல் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் தங்கம் வெல்லக்கூடிய வாய்ப்பு உள்ள வீரர் யாராக இருக்கலாம் என கணிப்புக்கள் இப்போதே ஆரம்பமாகிவிட்டன. அதன்படி, முக்கியமான ஐந்து பேர் இனங் காணப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர்தான் 2020 ஒலிம்பிக் 100 மீற்றரில் தங்கம் வெல்வார் என ஊகிக்கப்படுகின்றது.



அவர்களின் விபரம் வருமாறு;

அன்ட்ரே டி கிராஸ் (கெனடா, வயது - 21), டிரெவோன் புரொமெல் (அமெரிக்கா, வயது 21), நைஜல் எல்லிஸ் (ஜெமெய்க்கா, வயது - 19), அப்துல் ஹக்கிம் பிரவுன் (ஜப்பான், வயது - 17), ஸார்னல் ஹக்ஸ் (பிரிட்டன், வயது - 21).

**குறிப்பு:** *அன்ட்ரே டி கிராஸ் ரியோ 2016 போட்டியில் 100 மீற்றரில் போல்ட்டிற்கு இரண்டாமவராக வந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றவராவார்.*




செப்டெம்பர் 7 தொடக்கம் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான 'பராலிம்பிக்' போட்டியில் பங்குபற்றுவதற்கு ரஷ்யாவிற்கு முற்றுமுழுதான தடை விதிக்கப்பட்டுள்ளது. ரஷ்ய விளையாட்டு வீரர்கள் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்தை பயன்படுத்துவதற்கு அந்நாட்டு அரசாங்கமே உடந்தையாக இருந்ததாக நிருபணமாகியமையால் இம்முறை 'ரியோ' ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு ரஷ்யாவிற்கு தடை விதிக்கப்பட்டிருந்தபோதிலும், தடகள போட்டிகள் உட்பட, ஒரு சில போட்டிகளில் மாத்திரம் கலந்துகொள்வதற்கு ரஷ்யாவிற்கு வரையறுக்கப்பட்ட அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், அடுத்து நடைபெறவுள்ள'பராலிம்பிக்' போட்டிகளில் கலந்துகொள்வதற்கு ரஷ்யாவிற்கு தடை விதிக்கப்பட்டதனால், இதனை ரஷ்யா மீள் பரிசீலனை செய்யக்கோரியபோதிலும் ரஷ்யாவின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு இந்த தடை உத்தரவு உறுதிசெய்யப் பட்டுள்ளது.

# 4 வருட போட்டித் தடை

நடந்து முடிந்த ஒலிம்பிக்கில் மல்யுத்தப் போட்டிகளில் இந்தியாவின் சார்பாக போட்டியிட்ட நர்சிங் யாதவ் என்பவர் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்தைப் பயன்படுத்தினார் என்ற காரணத்திற்காக அவருக்கு 4 வருட கால போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவரது சிறுநீர் பரிசோதனையின்போது நீண்ட




காலமாக இவர் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தைப் பயன்படுத்தியுள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊக்க மருந்துத் தடுப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. இருப்பினும் தனது உணவில் திட்டமிட்டு ஊக்கமருந்து கலக்கப்பட்டிருந்ததாலேயே இந்த நிலைக்கு தான் ஆளானதாக குறிப்பிட்டுள்ள யாதவ், ஜிதேஷ் என்பவரே இதற்கு பொறுப்பாளியாவார் என்றும் குறிப்பிட்டுள்ளார். எனினும், இதற்கான போதிய ஆதாரங்களை அவர் முன்வைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாரணர் கத்திகளை அறிந்துகொள்வோம்!




How to hold a Chef Knife



விஜய் சாரணர் உலகம்

சாரணர் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தும் கத்தியின் முனைகள் கூர்மையானவை அல்ல. அவை மேசைக் கத்தியினைப் போன்று தோற்றமளிக்கும். அத்துடன், சாரணர் கத்தியின் பிடி மடக்கக் கூடியதாக தயாரிக்கப்பட்டிருக்கும். ஸ்விஸ் கத்திகளும் இவ்வாறே தயாரிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## சாரணர் கத்தியின் பகுதிகள்

படத்தில் காட்டப்பட்டுள்ள கத்திகளை நன்கு அவதானியுங்கள். மேலும், சாரணர் கத்தியின் பகுதிகள் ஆறு வகைப்படும். அவையாவன,

## கத்தியின் முனை - Heel

கத்தியின் கைப்பிடியினை நோக்கி இருக்கும் முனையை குறிக்கும் இது மங்கிய முனையாகும். இது வெட்டும் தன்மை அற்றது. சாரணர்கள் கத்தியால் ஏதேனும் பொருளை வெட்டும் போது, விரல்களை பாதுகாக்க வேண்டும் என்பதனால் கத்தியின் இந்த முனைப்பகுதி கூர்மைப்படுத்தப்படவில்லை.


## கத்தியின் பொருத்துப் பாகம் - Bolster

கத்திக்கு இதனாலேயே பலம் கிடைக்கின்றது.கத்தி வளையாமல் இருப்பதற்கு அதனை தயாரிக்கும் போதே, இந்த பொருத்துப் பகுதியின் மீது அதிக கவனம் செலுத்தப்படும். கத்தியின் பொருத்துப் பகுதியுடன் கத்தியின் கைப்பிடிப் பகுதி இணைந்தே உருவாக்கப்படும். சில கத்திகளில் இந்த பகுதி சுழலும் தன்மை கொண்டதாக இருக்கும்.







## கத்தியின் கைப்பிடி - Handle

பெரும்பாலும் கத்தியின் கைப்பிடியானது, வட்டவடிவிலும் சதுர வடிவிலும் பொருத்தப்படும். அவ்வாறான கைப்பிடிகளில் வட்ட வடிவிலுள்ள கத்தியினையும், கைக்குள் அடங்கும் கத்திக் கைப்பிடிகளையுமே சாரணர்கள் தெரிவு செய்வது சாலச் சிறந்ததாகும்.

**குறிப்பு:** கத்திகளை நீங்கள் வாங்கும்போது, கைப்பிடி பொருத்தப்பட்டுள்ள விதத்தினையும், மரத்திலான கைப்பிடியென்றால் மரத்தின் தரத்தையும் நன்கு பரீட்சித்து உறுதிசெய்யப்பட்ட பின்னர் வாங்குவது நன்மை பயக்கும்.

## வெட்டும் பகுதி கொண்ட முகப்பு - Edge

இது கத்தியின் மேற்பகுதியினை விட மெல்லியதாக இருக்கும். இதனால் கூர் விரைவாக மழுங்கி விடும். நன்கு தீட்டப்பட்ட கத்தியின் வெட்டு முனை நீண்ட காலம் தாக்குப் பிடிக்கும் தன்மை கொண்டது. சாரணர்கள் கத்தியினைப் பயன்படுத்திய பின்னர் கத்தி முகப்பினையும், கூர்முனையையும் நன்கு துடைத்து வைக்க வேண்டும்.

## கத்தியின் வெட்டுப்பகுதி - Blande

உருக்கினால் நீண்டகாலம் பயன்படுத்தக் கூடிய வகையில் கத்தியின் வெட்டு முகம் தயாரிக்கப்படுகின்றது. பலதரப்பட்ட அளவுகளில் கத்தியின் வெட்டுப் பகுதி பயன்படுத்தப்படுகின்றது.

## கத்தியின் கூர்முனை -Tip

சாரணர்கள் பயன்படுத்தும் கத்தியின் கூர்முனை மிகவும் கூர்மையாக இருக்கக் கூடாது. இது வீடுகளில் காய்கறிகள் வெட்டும் கத்தியினைப் போன்றதாகும். நாம் வெட்டும் பணியினை கத்தியின் கூர்முனையினால் மேற்கொள்கின்றோம். இதனால் கத்தியின் கூர்முனையினை தேவையின்றி பயன்படுத்தக் கூடாது.



## கத்தியினைப் பிடிக்கும் விதம்

சாரணர் கத்தியினைப் பயன்படுத்தும் நீங்கள் படத்தில் காட்டியுள்ளவாறே கத்தி யினைப் பிடிக்க வேண்டும். உங்களது பெருவிரலும், ஆட்காட்டி விரலும் சரியான முறையில் அமைந்திருக்க வேண்டும்.

## முன்னோடிகள் பயன்படுத்தும் கத்தி


திறந்தவெளி செயற்பாட்டினை விரும்பும் முன்னோடிகள் தமது செயற்பாடுகளை இலகுபடுத்திக் கொள்வதற்கு பலதரப்பட்ட கத்திகளைப் பயன்படுத்துகின்றனர். இங்கு அவ்வாறான கத்திகள் சில காட்டப்படுகின்றன. இவை அனைத்தினாலும் நன்மைகளைப் பெற முடியும். உலகின் பிரபல்யம் பெற்ற சுவிஸ் கத்தி நிறுவனமானது, கைகளில் அணிந்து கொள்ளும் வகையிலான கத்திகளை தயாரித்துள்ளது. கத்தி ஒன்றினைக் கொள்வனவு செய்யும் போது ஒரே கத்தியில் பல நன்மைகளைப் பெறக் கூடியவாறான கத்தியினை கொள்வனவு செய்யப் பெற்றோர்களினதும் சாரணர் பேராசிரியர்களினதும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள முயலுங்கள்.


(-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## எத்தனை உள்ளன?







A படத்தை அவதானித்து,
B படத்திலுள்ள வித்தியாசங்களில்
X அடையாளமிடுக

## வழி காட்டுங்கள்



## குறுக்கெழுத்துப் போட்டி: 203



### மேலிருந்து கீழ்


01. இரத்தினபுரி மாவட்டம் இதற்குப் பிரசித்தி பெற்றது.
02. நாட்டார் கலைகளில் ஒன்று.
03. நறுமண எண்ணெய் தயாரிக்கவும் மருந்துப் பொருளாகவும் பயன்படும் புல் வகையைச் சேர்ந்த தாவரம்.
04. வேதனை.
07. குழந்தை. (குழம்பியுள்ளது)
09. புழுதி. (தலைகீழ்)


### இடமிருந்து வலம்

01. வானொலியைக் கண்டுபிடித்தவர்.
04. உணவு உண்ணும் தட்டு. (குழம்பியுள்ளது)
05. தானிய வகையொன்று. (குழம்பியுள்ளது)
06. தோட்டத்தை சுற்றி அமைக்கப்படுவது. (மாறியுள்ளது)
08. சிங்கம். (மாறியுள்ளது)
09. கோபுரம்.

## அறிவுக்கு விருந்து (17.08.2016) விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| log | i | h | c | n | a | r | b | c | q |
| skate | v | g | y | h | m | t | x | g | c |
| roller | c | s | c | z | k | s | b | o | d |
| hammer | h | a | m | m | e | r | o | l | f |
| branch | z | e | x | s | k | a | t | e | m |
| kitchen | i | r | o | l | l | e | r | z | p |
| balloon | k | i | t | c | h | e | n | n | o |
| dinosaur | k | n | o | o | l | l | a | b | s |
| | d | i | n | o | s | a | u | r | k |





வட்டத்தினுள் இருக்கும் எழுத்துக்களை வைத்து அமைக்கக்கூடிய சொற்கள் சில:

மா, மாவடு, மாடு, மாலை, மாதம், மான், வடு, வலை, அவன், அவம், அம்மா, அலை, தன், தவம், தடு, தலை, காடு, காலை

## இடைவெளிகளை நிரப்புக




### குறுக்கெழுத்துப் போட்டி: 202 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1பா | 2கை | மா | னி | | 3அ |
| 4து | ணி | | | 5ப | ல |
| 6கை | ப் | பி | டி | | ங் |
| | ப | | ண் | 7பி | 8கா |
| ழி | | ண் | 9க | டி | ர |
| 10கோ | டை | | ணா | | ம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளும் சுப - துயர நிகழ்வுகளும்



உறவுகளை நீங்கள் மதிக்கும்போது அவர்கள் உங்களை அதிகளவில் நேசிக்கத் தொடங்கிவிடுகின்றனர். உறவினர்களுக்கு இடையே ஏற்படும் சுப மற்றும் துயர நிகழ்வுகள் உறவுகளை மேலும் வலுப்படுத்திவிடும் சந்தர்ப்பங்களும் அல்லது பிரிவுகளை ஏற்படுத்திவிடும் சந்தர்ப்பங்களும் உள்ளன. அந்தவகையில், சுப காரியங்களுக்காக உங்களை உறவினர்கள் அழைக்கும்போது அழைப்புக்குரியவர்களால் நீங்கள் மதிக்கப்படுகிறீர்கள் அல்லது அன்பு செலுத்தப்படுகிறீர்கள் என்பது அர்த்தமாகும். இத்தகைய அழைப்புக்களை நீங்கள் நிராகரிக்கும்போது உறவுகளிடையே பாரிய விரிசல் ஏற்பட்டுவிடுகின்றது.

எனவே, உறவுகளிடையே ஏற்படும் நிகழ்வுகள் மதிக்கப்பட வேண்டும். அது சுப காரியமாக இருக்கலாம் அல்லது துக்க காரியமாக இருக்கலாம். சுப காரியங்களுக்கு அழைக்கப்படும்போது செல்லும் நாம், துக்க நிகழ்வுகளில் அழைக்காமலேயே கலந்துகொள்ள வேண்டும். மாறாக, உறவினர்களை உதாசீனம் செய்வதும் அவர்களுடன் முரண்படுவதும் தவறான விடயங்கள் ஆகும்.



உறவினர்கள் துன்பத்தில் இருக்கும்போதும் வேதனையால் வாடும்போதும் முடிந்தளவில் அவர்களுக்கு உதவுதல் வேண்டும். இது மிகச் சிறந்த பண்பாகும். அந்தவகையில், பிள்ளைகளாகிய நீங்களும் உறவு முறைகளைப் பற்றி அறிந்திருத்தல் வேண்டும். உறவுகளை மதித்தல், அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளல், அவர்களைக் கனம் பண்ணுதல் தொடர்பிலும் மேலும் சமூகம் என்றால் என்ன? அதில் உறவுகள் என்றால் என்ன? உங்களுக்கும் உறவினர்களுக்கும் இடையேயான உறவுமுறைகள் என்ன? சமூகத்தில் எவ்வாறு நாம் நடந்துகொள்ள வேண்டும்? என்பன தொடர்பிலும் பிள்ளைகளாகிய நீங்கள் அறிந்திருத்தல் வேண்டும். அப்போதுதான் நீங்கள் பூரணத்துவம் அடைந்த மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ முடியும்.







எம்.பிரவீன்,
கோட்லொஜ் த.வித்., நுவரெலியா.



எச்.ஹஸ்னா,
அல்-மின்ஹாஜ் தே.பாட.,
ஹபுகஸ்தலாவை.




ஜெ.கவினயா,
ஹைலண்ட்ஸ் கல்., ஹட்டன்.




த.புகிர்ஷா,
பாலர் பாட., மட்டக்களப்பு.



கே.துஷிந்தா,
ப/ஊவா விஞ்ஞானக் கல்.,
ஹாலி-எல.



சி.அருண்குமார்,
ரணபிம ரோயல் கல்.,
மொரகொல்ல.



எம்.தர்மிஷா,
புனித பத்திரிசியார் கல்.,தலவாக்கலை.



என்.சபினாப்,
அஸ்கார் கல்.,
அக்குறணை.



பா.அருஸ்ணபவன்,
கோட்லொஜ் த.வித்., கந்தப்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நயகரா நீர்வீழ்ச்சி (Niagara Falls)

உலகில் மிக அழகிய நீர்வீழ்ச்சியாக பெரும் அகலப்பரப்பில் பேரிரைச்சலுடன் வெள்ளை நிறத்தில் வீழ்ந்துகொண்டிருக்கும் நீர்வீழ்ச்சிதான் 'நயகரா' ஆகும். இந்த நீர்வீழ்ச்சி வட அமெரிக்கா கண்டத்தில் கனடா, ஐக்கிய அமெரிக்க நாடுகளின் எல்லையில் நியூயோர்க்-ஒண்டாரியோ (New york - ontario) நகரங்களுக்கு நடுவே அமைந்திருக்கிறது.

நயகரா ஆற்றில் உருவாகிய, இந்த நீர்வீழ்ச்சியின் உயரம் 167 அடியாகும். உலகிலேயே மிகவும் அகலமான நீர்வீழ்ச்சி நயகராதான். இங்கு தண்ணீர் அதிகமாக வரும்போது, ஒரு நிமிடத்திற்கு 60 லட்சம் கியூபிக் சதுர அடியில் தண்ணீர் விழுகிறது. பொதுவாக, மற்ற நேரங்களில் 4 லட்சம் க்யூபிக் சதுர அடி தண்ணீர் விழுகின்றது.

## மின்சாரம்

இந்த நீர்வீழ்ச்சியில் நீர்மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. 12,000



ஆண்டுகளுக்கு முன்னர் உறைந்த நயகரா ஆற்றிலிருந்து தண்ணீர் உருகிய காலத்தில் இந்த நீர்வீழ்ச்சியும் பிறந்தது. வட அமெரிக்காவின் சக்திவாய்ந்த பெரிய நீர்வீழ்ச்சி நயகரா ஆகும்.

## மூன்று நீர்வீழ்ச்சிகள்

கனடியன் ஹோர்சஸ்ஹோய் நீர்வீழ்ச்சி (The Canadian Horseshoe Falls), அமெரிக்கன் நீர்வீழ்ச்சி (The American Falls), ப் ரைடல் வெயில் நீர்வீழ்ச்சி (The Bridal Veil Falls) ஆகிய மூன்று நீர்வீழ்ச்சிகள் சேர்ந்ததுதான் நயகரா நீர்வீழ்ச்சி

## நயகராவின் சிறப்பியல்பு

ஒவ்வொரு ஆண்டும் 12 மில்லியன் மக்கள் இந்த நீர்வீழ்ச்சியைப் பார்வையிட வருகின்றனர். உலகில் ஐந்தில் ஒரு பகுதி நன்னீர் நயகரா ஆற்றில் உள்ளது. இந்த நீர்வீழ்ச்சியில் ஒரு விநாடிக்கு 1300 கனவளவு நீர் விழுகின்றது. அத்தோடு, அகலவாக்கில் மூன்று நீர்வீழ்ச்சி கள் ஒரே நேரத்தில் விழுவதால் அகலமாகவும் அழகாகவும் பார்ப்பவர் மனதில் பேரானந்தத்தைக் கொடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(-அ)

## வெல்லுங்கள்! விஜய் - தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ Practical English Learning Software DVD




★ 4000 English Letter Writing Software




★ 8 GB Pen Drive



புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்கத் தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்.

17.08.2016 'தூவானம்' கேள்விக்கான விடை:
ஜெரமி பெந்தம்
Pendrive வெற்றியாளர்:
மா.நாகதர்சிகன்,
செல்லத்துரை வீதி,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message
F Thoovaanam
என Type செய்து
40404 எனும்
இலக்கத்திற்கு
SMS செய்யவும்

அனுப்ப வேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(31.08.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

இவ்வார கூப்பன்:
31.08.2016
விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................

..................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமான படகு ஒன்றினை அமைப்போம்




## விஞ்ஞான விந்தைகள்



நீங்கள் இன்று வேகமாகப் பயணிக்கக்கூடிய படகொன்றை நிர்மாணிக்கக் கற்றுக்கொள்ளவுள்ளீர்கள்.

**தேவையான பொருட்கள்:**

- ★ 2 லீற்றர் சோடாப் போத்தல்
- ★ உறிஞ்சும் குழாய் (ஸ்ரோ சிறிய துண்டு)
- ★ கிளே
- ★ பேப்பர் டவல் ஒன்று
- ★ பேக்கிங் சோடா அரை மேசைக்கரண்டி
- ★ வினாகிரி 1/4 கோப்பை

### இவ்வாறு செய்து பார்ப்போம்

★ சோடாப் போத்தல் மூடியின் நடுவில் சிறிய துளை யொன்றினை இட்டுப் படத்தில் காட்டியுள்ளவாறு ஸ்ரோவினை உட்செலுத்தி, கிளேயினைக் கொண்டு இறுக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

★ பேப்பர் டவலின் மத்தியில் பேக்கிங் சோடா சிறிதளவினை இட்டு டொஃபி சுற்றுவது போன்று பேப்பர் டவலின் இரு முனைகளையும் சுற்றிக் கொள்ளுங்கள். (வினாகிரியும் பேக்கிங் சோடாவும் ஒன்றுக்கொன்று விளைவு காட்டுவதனை சற்று தடுப்பதே இதன் காரணமாகும்)

★ போத்தலினுள் வினாகிரியினை ஊற்றவும், அத்துடன், பேக்கிங் சோடா கொண்ட பேப்பர் டவலினையும் போத்தலினுள் இட்டு உடனடியாக போத்தலின் மூடியினை இறுக்கமாக மூடுங்கள்.

★ பின்னர் இந்த போத்தலினை நீங்கள் விரும்பும் குளியல் தொட்டியிலோ அல்லது பெரிய பேசனிலோ இடுங்கள். (படத்தில் காட்டியது போன்று)

★ பேக்கிங் சோடா மற்றும் வினாகிரி ஒன்றுக்கொன்று விளைவினை ஏற்படுத்த ஆரம்பிக்கும்போது நீங்கள் நிர்மாணித்த படகு தனது பயணத்தினை வேகமாக ஆரம்பிக்கும்.



### நடைபெறுவது என்ன?

பேக்கிங் சோடாவின் (சோடியம் பைகாபனேற்) மூலக்கூறில் காபனீரொக்சைட் வாயு அடைபட்டுள்ளது. வினாகிரி (அசிடிக் அசிட்) போன்ற அமிலத்துடன், பேக்கிங் சோடா எதிர்விளைவு காட்டும் போது காபனீரொக்சைட் வாயு வெளியேறுகின்றது.

காபனீரொக்சைட் வாயுவானது வினாகிரி மற்றும் பேக்கிங் சோடாவினை விட அதிக கொள்ளளவு கொண்டது. இதனால், காபனீரொக்சைட் வாயு குமிழ்களை வெளியேற்றி மேல் எழுகின்றது. இதன்போது போத்தலினுள் அமுக்தம் ஒன்று ஏற்பட்டு போத்தலினுள் உள்ள வினாகிரி உறிஞ்சு குழாயினூடாக வெளி நோக்கி பயணிக்கின்றது. இதன் காரணமாகவே, நீங்கள் நிர்மாணித்த படகு ஜெட்டின் வேகத்திற்கு இணையாக பயணிக்க ஆரம்பிக்கின்றது.

# லக்ஸம்பேர்க்

ஐரோப்பா கண்டத்தில் அமைந்துள்ள இந்நாட்டினை நெப்போலியனின் பிரெஞ்ச் விஸ்தரிப்பில் உள்வாங்கப்பட்டு 1815 இல் விடுவிக்கப்பட்டாலும் பின்னர் நெதர்லாந்தின் ஆதிக்கத்திற்குட்பட்ட பின்னர் 1867 இல் லக்ஸம்பேர்க் முழுமையாக சுதந்திரம் பெற்றது. 1949 இல் நேட்டோ அங்கத்துவத்தைப் பெற்றது.

எட்டாம் ஆர்டினிஸ் கி.பி 963 இல் புனித மெக்ஸிமின் தேவாலயத்தில் இருந்து இப்பிரதேசத்தை விலைகொடுத்து வாங்கி அதனைச் சுற்றி கோட்டையை கட்டினான்.

கி.பி 1443 இல் பேர்கண்டின் ஆட்சியாளர் இந்நாட்டினை ஆக்கிரமித்தனர்.

அடர்ந்த காடுகள் பல உள்ளன.

தேசிய மிருகம் - சிங்கம்
தேசிய பறவை - தலையில் மஞ்சள் நிற அடையாளமுள்ள கோல்டன் க்ரேஸ்ட் பறவை.
தேசிய மலர் - ரோஜாப்பூ

அரச வம்சத்தைச் சேர்ந்த ஹென்ரி இந்நாட்டின் அரசத் தலைவராவார்.

**இனங்கள்**




**மொழி** லக்ஸம்பேர்க் 88.8%, பிரான்சியர் 4.2%, போர்த்துக்கேய மொழி 2.3%, ஜேர்மனி 1.1%, ஏனைய மொழி பேசுபவர்கள் 3.5%

**சமயம்** உரோமன் கத்தோலிக்கம் 87% ஏனையோர் 13%

**இயற்கை வளம்** லோப்பஸ்

**அரசியல்** லக்ஸம்பேர்க்கின் நாடாளுமன்றம்

பிரதமர் - சேவியர் பெட்ல்

ஐரோப்பாவில் அடிப்படை சேவை மையமாக இந்நாடு திகழ்கின்றது. இங்கு 230க்கும் அதிகமான வங்கிகள் அமைந்துள்ளன.

மொத்த நிலப்பரப்பு ச.கி.மீற்றர்
**2,586 km²**

மொத்த சனத்தொகை
**562,958**




நாணயம்- யூரோ

**தலைநகரமும் பெரிய நகரமும்**

அதிகளவு குடிபெயர்ந்தோர் உள்ளனர்.

பாரம்பரிய உடை.

பாரம்பரிய நடனம்.

விவசாயம் முக்கிய வாழ்வாதாரம்.

நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துகின்றனர்.

மனித தேவைக்காக மிருகங்கள் வளர்க்கப் படுகின்றன.

உயர் வைத்திய வசதிகள் உள்ளன.

உரோமன் கத்தோலிக்க தேவலாயம் ஒன்று.

இங்கு டயர் தயாரிக்கப் படுகின்றது.

இராசயனத் திரவிய உற்பத்திக்கு புகழ்பெற்றது.

லோப்பஸை கொண்டு உலோக உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

உயர் வகை லோப்பஸ் வளம் உள்ள நாடு.

சுற்றுலாத் துறைக்கான பல இடங்கள் உள்ளன.

அணுசக்தி மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன்? எப்படி?

**கேள்வி:** பண்டைய காலத்தில் எகிப்தில் வாழ்ந்த அரச குடும்ப அங்கத்தவர்களை 'மம்மி' களாக உருவாக்கியது ஏன்?

**பதில்:** விசேடமான முறையில் பதப்படுத் தப்பட்ட சடலமே 'மம்மி' என்று அழைக்கப் படுகின்றது. ஒருவர் மரணமடைந்தால் அவரின் ஆன்மா வேறிடத்திற்கோ அல்லது வேறு உலகுக்கோ செல் கின்றது என்றும், அதற்கு அவரின் உடல் பழுதடையாமல் இருக்க வேண்டும் என்றும் பண்டையகால எகிப்தியர்கள் நம்பினர். இதனால், சடலங்களை தேனில் ஊறவிட்ட பின்னர் பதப்படுத்தும் மருந்துகள் பூசப்பட்ட துணிகள் மற்றும் பதார்த் தங்களினால் சுற்றிக் கட்டினர்.



அத்தோடு, இறந்தவர் தனது வாழ் நாளில் பயன்படுத்திய பொருட்கள் மற்றும் பெறுமதி மிக்க அணிகலன்களு டன் பிரமிட்டுகளில் அடக்கம் செய்யப் பட்டனர். அவ்வாறு செய்யாவிடின் இறந்தவரின் ஆன்மாவுக்கு அடுத்த பிறவி கிடைக்காது என்ற கருத்தும் நிலவியது. உடலுடன் புதைக்கப்பட்ட பொருட்கள் அடுத்த பிறவியில் பயன்படுத்தப்படும் என்றும் அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

**கேள்வி:** ஒட்டகத்தின் முதுகில் திமில் காணப்படுவது ஏன்?

**பதில்:** ஒட்டகத்தை 'பாலைவனக் கப்பல்' என அழைப்பார்கள். இவை பாலைவனங்களில் பயணிக்கும்போது, உணவின்றி, நீரின்றி பல நாட்கள் பயணிக்கும். ஏனெனில், ஒட்டகத்தின் முதுகில் பெரியதொரு கூன் போன்ற திமில் இருப்பதாலேயே இது சாத்தியமாகின் றது. இதனை 'கொழுப்புக் கிடங்கு' என்றும் அழைக்கின்றனர். ஒட்டகம் நீண்ட தூரம் பயணம் செய்வதற்கு முன்னர் ஒட்டகத்தால் மிதமிஞ்சி எடுக் கப்படும் உணவு கொழுப்பாக மாறி இதன் திமிலில் சேமிக்கப்படுகிறது. ஏறத்தாழ 45 கிலோ எடை கொண்ட இப்பகுதியில் சேமிக்கப்பட்டுள்ள கொழுப்புப் பொருள் பயணத்தின்போது, ஒட்டகத்துக்கு ஊட்டமாக மாறுகின்றது. இதன்போது ஒட்டகத்தின் முதுகி லுள்ள திமில் நீண்ட பயணத்தின்பின் குறைந்துவிடுகின்றது. அப்போது ஒட்டகம் சோர்ந்து படுத்துக்கொள்ளும். நன்றாக ஓய்வெடுத்து தேவையான அளவு உணவுகளை உட்கொண்ட பின்னர் ஒட்டகம் மீண்டும் பயணத் திற்குத் தயாராகிவிடும்.



## கணிதச் சிக்கலைத் தீர்ப்போம்!

# சங்கிலிகளைப் பிணைத்தல்

தொழிற்சாலை யொன்றில் பணியாற் றும் ஒருவருக்கு தலா 3 வளையங்களை இணைப்பாகக் கொண்ட 5 பகுதி களைக் கொண்ட சங்கி லிகளை வட்ட வடிவில் தொடராக இணைப்ப தற்கு சிக்கல் ஒன்று ஏற் பட்டது. இந்த சிக்க லுக்கு உங்களால் தீர்வு காண முடியுமா?






இதற்காக, சில நிபந் தனைகளின்படி முயற் சிக்க முடியும். இவற்றை ஒன்றாகப் பிணைப்ப தற்கு துண்டுகளை வெட்டி அகற்ற முடியும். இதற்கான தீர்வினை செயல்முறை ரீதியாக சிந்தித்து கண்டுபிடிக்கலாம். முயற்சித்துப் பாருங்கள்.

பதில்: இங்கு சங்கிலித் துண்டு கள் 5 உள்ளன. ஒன்றில் 3 பிணைப் புகள் உள்ளன. இதனைப் பிணைக்கும் சரியான வழிமுறை என்னவென்றால், மூன்று வளையங்களைக் கொண்ட ஒரு சங்கிலித் துண்டுப் பகுதியினை அகற்றி அதில் உள்ள ஒவ்வொரு வளையத்தையும் கழற்றி எடுத்து எஞ்சும் சங்கிலிகள் நான்கினைப் பிணைப்பதன்மூலம் இது சாத்தியமாகும்.

# தெரிந்து கொள்வோம்

★ 1880 ஆம் ஆண்டில் வெளியான பென் ஹர் (Ben-Hur) என்ற நாவலை எழுதியவர் யார்?

லீ வலேஸ் (Lew Walace)




★ நீல அல்லி மலர் வேறு என்ன பெயரால் அழைக்கப் படுகின்றது?



ஆம்பல் மலர்



★ மன்னர் பிலிப் மகாராணி மெதில்டேவுடன் எந்த நாட்டில் அரச ஆட்சி செய்கிறார்?

பெல்ஜியம்



★ பிரித்தானிய அரசால் வழங்கப்படும் 'சேர்' என்ற கௌரவப் பட்டத்தைப் பெற்ற முதல் இலங்கையர் யார்?

சேர் முத்துக் குமாரசுவாமி

★ ஐக்கிய இராச்சியத்தில் 2 ஆவது பெண் பிரதமரின் பெயர் என்ன?



தெரேசா மே

★ இலங்கையில் மிகவும் உயரமான முதல் மூன்று நீர்வீழ்ச்சிகள் எவை?



i. பம்பரகந்த 263 மீற்றர்
ii. தியலும 220 மீற்றர்
iii. குருந்து ஓயா 206 மீற்றர்



★ நேட்டோ அமைப்பில் அங்கம் வகிக்கும் ஒரேயொரு இஸ்லாமிய நாடு எது?

துருக்கி



★ ஸிகா வைரஸ் காய்ச்சலைப் பரப்பும் நோய் காவி எது?

நுளம்பு

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏழு மெஜிக் மலைகள்



கற்பாறைகளுக்கு பல வர்ணங்கள் தீட்டி, அவற்றை ஒன்றின்மேல் ஒன்றாக ஏழு தூண்கள் வடிவில் அடுக்கி வைத்து காட்சிப்படுத்தி வருகின்றார் சுவிஸ் நாட்டின் ஊகோ ரொன்டினோ என்ற கலைஞர். கண்கவர் வர்ணங்கள் தீட்டப்பட்டுள்ள இந்த பாறை அடுக்குகளுக்கு 'ஏழு மெஜிக் மலைகள்' (seven magic mountains) என அவர் பெயர் சூட்டியுள்ளார். ஒவ்வொரு பாறை அடுக்கும் சுமார் 30-35 அடி வரையான உயரம் கொண்டது. லாஸ் வேகாஸின் நெவாடா பாலைவனப் பகுதியிலேயே இந்த கற்பாறைக் கண்காட்சி இடம்பெறுகின்றது. கடந்த மே மாதம் 11 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த கலைக் கண்காட்சி, இன்னும் இரண்டு வருடங்களுக்கு மக்கள் பார்வைக்கு இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஆண் இனமே அடைகாக்கிறது...!





முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் உயிரினங்களில் பெரும்பாலானவை, தாம் இடும் முட்டைகளை தாமே அடைகாத்துத்தான் குஞ்சு பொரிக்கும். ஆனால், கடல்வாழ் உயிரினங்களில் ஒன்றான கடற்குதிரையினத்தில், ஆண் கடற்குதிரையின் வால் பகுதிக்குக் கீழாக அமைந்துள்ள பையில் பெண் கடற்குதிரை முட்டையிட்டுச் சென்று விடும். பின்னர், இந்த முட்டைகளை ஆண் கடற்குதிரைதான் ஆறு வாரங்கள் வரை அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும்.



# யானைகளின் மூதாதை

யானைகளின் மூதாதை பற்றி நீங்கள் கேள்விப்பட்டுள்ளீர்களா? அதுதான் 'மெமத்' எனப்படுகின்றது. மெமத்கள் இற்றைக்கு சுமார் 4.8 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் வாழ்ந்துள்ளதாக கூறப்படுகின்றது. இவை, இன்று நாம் காணும் யானைகளைவிட பெரிய தோற்றம் கொண்டவை. இவற்றின் உடலில் அடர்ந்த மயிர்கள் காணப்பட்டன. Elephantidae என்ற குடும்பத்தைச் சேர்ந்த இவை, யானைகளின் மூதாதைகளாகக் கருதப்படுகின்றன. இதை 'கம்பளி யானை' என்றும் குறிப்பிடுவர்.




# ஆழிப்பேரலை

'சுனாமி' (Tsunami) என்பது, ஜப்பானிய சொல் ஆகும். இதற்கு 'துறைமுக அலை' என்று பொருள். ஜப்பானிய துறைமுகங்களை இத்தகைய பேரலைகள் காலத்திற்குக் காலம் தாக்கியதால்தான் இந்தப் பெயர் புழக்கத்திற்கு வந்தது. தமிழில் இதனை 'ஆழிப்பேரலை' என்றழைப்பர்.

ஆழிப்பேரலையின்போது பல அலைகள்



ஒன்றன்பின் ஒன்றாக கரையை நோக்கி மிக வேகமாக வரும். இந்த அலைகள் பெரும்பாலும் உயரமான அலைகளாகவும் தீவிரமானதாகவும் இருக்கும் என்று கூறப்படுகின்றது. சுனாமி ஏற்படுவதற்கு முன்பாக, கடல் உள்வாங்கும் நிலையை அவதானிக்கக்கூடியதாக இருக்கும். சுனாமியின் தாக்கத்தை அளவிட 'ரிக்டர்' (ரிச்டர்) அளவுகோல் பயன்படுகின்றது.

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, ஒகஸ்ட் 31 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday August 31, 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org